# நல்ல நிறுவனத்தில்

நமது தொழிலாளர்கள், நுகர்வோர்கள் & வர்த்தகப்
பங்குதாரர்களுக்கு ஹெர்ஷேயின் வாக்குறுதி



HERSHEY'S

நடத்தை விதி

# தலைமையின் செய்தி

அன்பார்ந்த நண்பர்களே,

ஹெர்ஷேயின் உன்னதமான பாரம்பரியம் பற்றி சிந்திக்கும்போது, கடந்த 120 ஆண்டுகளில் பல சாதனைகளையும் முக்கிய கட்டங்களையும் நாம் தாண்டி வந்திருக்கிறோம். ஆனால், நமது வாடிக்கையாளர்களின் மற்றும் நாம் வர்த்தகம் செய்யும் பங்குதாரர்களின் நம்பிக்கையை எப்போது பெற்றோம் என்று ஒரு குறிப்பிட்ட நாளைக் குறிப்பிட முடியாது. ஏனென்றால், அது ஒரு நாளில் நடந்து விடவில்லை. அது பல ஆண்டுகளாக—உண்மையில் பல சகாப்தங்களாக—மக்கள் நமது தயாரிப்புகளின் எளிமையான நன்மைத்தனத்தை அடையாளம் காணும்போது ஏற்பட்டது.

நம்பிக்கை என்பது நமது மிக மதிப்புமிக்க சொத்துகளுள் ஒன்று. அது மிக எளிதில் நொறுங்கி விடக்கூடியதாகவும் உள்ளது. ஒரு நிகழ்வு, ஒரு செய்திக் கதை, ஒரு கவனமற்ற கருத்துப் பகிர்வு, தவறாக அமைந்தால் நாம் கஷ்டப்பட்டு சம்பாதித்த நம்பிக்கை போய்விடும். அதன் காரணமாகவே, நாம் விற்கும் தயாரிப்புகள் எவ்வளவு முக்கியமோ அந்த அளவு நாம் வர்த்தகம் செய்யும் வழிமுறையும் முக்கியமானது. நமது நடத்தை விதி நமது வர்த்தகத்தை பொறுப்போடு செய்யவும், அறநெறியோடு முடிவுகளை எடுக்கவும் … நம்பிக்கையைப் பேணவும் தேவையான வளங்களையும் தகவலையும் கொடுக்கிறது.

நமது நடத்தை விதியை வாசித்து உங்கள் செயல்களுக்கு வழிகாட்டியாகப் பயன்படுத்த நாம் ஊக்குவிக்கிறோம். நீங்கள் செய்யும் அனைத்திலும் நல்லதைச் செய்ய முயற்சியுங்கள். மில்டன் ஹெர்ஷேயின் பாரம்பரியத்துக்கு உண்மையாக இருங்கள். உங்களுக்கு ஏதாவது விதிமீறல் பற்றிய கவலை இருந்தால் அல்லது ஏதோ தவறாக நடப்பதைப் பார்த்தால் அதற்கு எதிராகப் பேசுங்கள், நீங்கள் செய்யவேண்டிய சரியான விஷயம் பற்றி உறுதியாகத் தெரியாதிருந்தால் எந்த நேரத்திலும் வழிகாட்டுதலைத் தேடுங்கள்.

நாம் இணைந்து சாதித்துள்ள அனைத்தையும் பற்றிப் பெருமிதம் கொள்கிறோம். இந்த பெரிய நிறுவனத்தை நடத்த பணிந்து போகிறோம். நாம் இணைந்து தொடர்ந்து ஒரு நேர்மறையான வித்தியாசத்தை உருவாக்குவோம் என்பதை நாம் அறிவோம்.

மிக்கேல் பக்
தலைவர் மற்றும் தலைமைச்
செயல் அலுவலர் (CEO)
ஹெர்ஷே நிறுவனம்



# நமது பாரம்பரியம்

வாடிக்கையாளரின் விசுவாசத்தையும் தங்கள் பிராண்டுகள் மற்றும் நிறுவனங்களில் நம்பிக்கையையும் கட்டியெழுப்புவதற்கு உலகம் முழுவதும் பல நிறுவனங்கள் கடுமையாக உழைக்கின்றன. ஆனால், ஹெர்ஷே பிராண்டு?நமது மக்கள், நமது தயாரிப்பு, நமது மரபுரிமை? அந்த ஒரு நபரின் கண்ணோட்டத்துக்கும் நல்லெண்ணத்திற்கும் நன்றி! இவை ஏற்கனவே நன்கு அறியப்பட்டும் நன்கு ஏற்கப்பட்டும் விட்டன.

மில்டன் ஹெர்ஷே, தொடக்கத்தில் மிகவும் சாதாரணமான முறையில் ஒரு நிறுவனத்தையும், ஒரு சமூகத்தையும், ஒரு கனவையும் ஏற்படுத்தினார். இன்று நாம் மக்கள் போற்றும் 80 உலகளாவிய பிராண்டுகளைத் தயாரிக்கின்ற மற்றும் நமது அன்புக்குரிய பென்சில்வேனியாவின் எல்லைகளைத் தாண்டி, உலகம் முழுவதும் 21,000-க்கும் மேற்பட்ட திறம்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட ஒரு நிறுவனமாக வளர்ந்துள்ளோம்.

நாம் என்ன தயாரிக்கிறோம் என்பதற்காக மட்டுமல்ல, நாம் என்ன செய்கிறோம் என்பதற்காகவும் மக்கள் நம்மை அறிந்துள்ளனர். நாம் வசிக்கின்ற, வேலை செய்கின்ற சமூகங்களில் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதிலும், சமூக அக்கறையோடு இருப்பதிலுமான நன்மதிப்பை நாம் உருவாக்கியுள்ளோம். மில்டன் ஹெர்ஷே பள்ளி வழியாக ஒரு பிரகாசமான எதிர்காலத்தை உருவாக்குவது மற்றும் குழந்தைகளின் சிந்தனைகளுக்கு ஊட்டமளிப்பது முதல் கோகோ விவசாய சமூகங்களுக்கு அதிகாரமளிப்பது வரை மில்டன் ஹெர்ஷேயின் பாரம்பரியம் நீண்டுள்ளது.

1894 முதல் நாம் அனைவரும் இணைந்து உலகத்திற்கு நல்லதைக் கொண்டுவந்து கொண்டிருக்கிறோம். நமது கதையானது ஒரு சாக்லேட் பாருடன் தொடங்கியது. ஆனால், அத்தோடு முடிந்துவிடவில்லை. "நன்மையைச் செய்வதன் மூலம் நன்றாக இருப்போம்" என்பதை மில்டன் ஹெர்ஷே நம்பினார். ஒவ்வொரு நாளும் நாம் மேம்பாட்டைச் செய்து கொண்டிருக்கிறோம். அது நமது புதிய தயாரிப்பாக இருக்கலாம் அல்லது மக்கள் அல்லது சமூகங்களில் முதலீடு செய்வதற்கான ஒரு புதிய உலகளாவிய முன்முயற்சியாக இருக்கலாம்.

### பிராண்டு உறுதிமொழி

## நல்லதை உலகிற்கு வெளிப்படுத்துவது

### நம்புவதற்கான காரணங்கள்

நீடித்த மற்றும் இதயப்பூர்வமான நன்மை நாம் செய்யும் அனைத்து செயல்பாடுகளிலும் வெளிப்படையாக உள்ளது:

நமது பிராண்டுகள்: சுவையான தயாரிப்புகள் மற்றும் ஈர்க்கும் அனுபவங்கள்.

நமது நற்செயல்கள்: நம் குழந்தைகள் மற்றும் சமூகங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவது.

நமது மக்கள்: அர்ப்பணிப்பும், கருணையும் கொண்ட தொழிலாளர்கள்.

# உள்ளடக்க அட்டவணை


தலைமையின் செய்தி 1

நமது பாரம்பரியம் 2

நமது நடத்தை விதியில் நாம் பெருமை கொள்கிறோம் 4
- இங்கு தொடங்கவும் 4
- உங்கள் பொறுப்புகளை அறிந்து கொள்ளுங்கள் 6
- பயமின்றிப் பேசுங்கள் 6
- உதவிக்கு எங்கு செல்ல வேண்டும் என்று அறிந்து கொள்ளுங்கள் 7

ஒரு நெறிமுறைசார்ந்த பணியிடத்தை நாங்கள் ஆதரிக்கிறோம் 8
- மற்றவர்களுக்கு மதிப்பளித்திடுங்கள் 8
- பாதுகாப்பான ஹெர்ஷேயை உருவாக்கிடுங்கள் 10
- மனித உரிமைகளை நிலைநாட்டுங்கள் 11

மற்றவர்களுக்கான நமது பொறுப்புகளை நாம் உணர்கிறோம் 12
- தயாரிப்பின் தரத்தையும் பாதுகாப்பையும் பேணிடுங்கள் 12
- தனிப்பட்ட தகவல்களை அந்தரங்கமாக வைத்திருங்கள் 14
- நமது பங்குதாரர்களுக்கு மதிப்பளியுங்கள் 15

சரியான விஷயங்களை நாம் செய்கிறோம் 16
- லஞ்சம் அளிப்பதில்லை 16
- அன்பளிப்புகள் மற்றும் பொழுதுபோக்கு பற்றிய விதிகளை அறிந்து கொள்ளுங்கள் 18
- நியாயமாக போட்டியிடுங்கள் 19
- நிறுவனத்தின் பொதுவானதல்லாத தகவல்களை கொண்டு வணிகம் செய்யாதீர்கள் 20
- துல்லியமான பதிவேடுகளை வைத்திருங்கள் 21
- இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் வர்த்தக இணக்க விதிகளைப் பின்பற்றுங்கள் 22

நமது நிறுவனத்தை நாம் பாதுகாக்கிறோம் 23
- நமது சொத்துக்களைப் பாதுகாக்கவும் 23
- நோக்க மோதல்களைத் தவிர்க்கவும் 25
- நமது நிறுவனத்தின் சார்பாகப் பேசாதீர்கள் 26

நாம் நல்ல உலகளாவிய குடிமக்களாக இருக்கிறோம் 27
- நல்ல பணியாளராக இருங்கள் 27
- நல்லதைப் பகிருங்கள் மாற்றத்தை உருவாக்கிடுங்கள் 29

நமது நேர்மையில் நம்பிக்கை கொள்ளுதல் 30

# நமது நடத்தை விதியில் நாம் பெருமை கொள்கிறோம்

இங்கு தொடங்கவும்

உங்கள் பொறுப்புகளை அறிந்து கொள்ளுங்கள்

பயமின்றிப் பேசுங்கள்

உதவிக்கு எங்கு செல்ல வேண்டும் என்று அறிந்து கொள்ளுங்கள்

## இங்கு தொடங்கவும்

**நமது நடத்தைவிதிகள் நாம் யார் என்பதையும் நமக்கு எது முக்கியம் என்பதையும் பிரதிபலிக்கின்றன.**

நமக்குப் பொருந்தக்கூடிய சட்டங்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் நிறுவனக் கொள்கைகள் பற்றியும், நாம் என்ன செய்கிறோம் என்பது பற்றியுமான ஒரு கண்ணோட்டத்தை வழங்குவதோடு, அதையும் தாண்டிய பல விஷயங்களை நமக்கு வழங்குகிறது. இது நமது பகிரப்பட்ட மதிப்பீடுகளின் மீது கட்டமைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே நமது அனைத்துத் தொழிலாளர்களும், நிர்வாகக் குழு உறுப்பினர்களும் மற்றவர்கள் நம்மீது வைத்துள்ள நம்பிக்கையைக் காக்கின்ற நடத்தை விதிகளைப் பின்பற்றி முடிவுகளை எடுக்குமாறு கேட்கிறோம். நமது ஆலோசகர்கள், விநியோகஸ்தர்கள், துணை உற்பத்தியாளர்கள், சப்ளையர்கள், துணைநிறுவனங்கள் மற்றும் கூட்டு முயற்சி பங்குதாரர்கள் உட்பட்ட நமது வர்த்தகப் பங்குதாரர்களிடமிருந்து இதனைத் தவிர வேறு எதையும் நாம் எதிர்பார்ப்பதில்லை. நமது உயர்ந்த தரத்திலான நேர்மையை அவர்கள் அறியச்செய்வது நமது பொறுப்பு. மேலும் நமது எந்த மதிப்பீடுகளையும் மற்றும் இயக்கக் கோட்பாடுகளையும் அவர்கள் மீறக்கூடாது.

நமது நடத்தை விதிகள் என்பது மிகப்பெரிய ஆதாரம். ஆனால், நீங்கள் வேலையில் சந்திக்கும் ஒவ்வொரு சூழலையும் இது உள்ளடக்குவதில்லை. எனவே, நீங்கள் செய்யும் ஒவ்வொரு விஷயத்திலும் நன்கு யோசித்து முடிவெடுக்கவேண்டியது முக்கியமானது. சரியான செயல்பாடு பற்றிய தெளிவுத்தன்மை வேண்டும் பட்சத்தில் உதவியைக் கோருவதும் முக்கியமாகும்.

# உறுதியாகத் தெரியவில்லையா? உங்களையே கேட்டுக்கொள்ளவும்:

நமது மதிப்பீடுகளை இது பிரதிபலிக்கிறதா?

ஹெர்ஷேக்கும், என்னுடைய சக பணியாளர்களுக்கும் இது நல்லதா?

அதுபற்றி எல்லாருக்கும் தெரியவந்தால் அது சரி என நான் உணர்வேனா?

இந்த எல்லாக் கேள்விகளுக்கும் நீங்கள் "ஆம்" என்று பதிலளிக்க முடியுமென்றால், முன்னோக்கிச் செல்வது சிறந்தது. ஆனால், "இல்லை" அல்லது "உறுதியாகத் தெரியவில்லை" என்ற பதில் ஏதாவதொரு கேள்விக்கு இருக்குமானால், நிறுத்திவிட்டு அதனை மறுபரிசீலனை செய்வது நல்லது. எந்தவொரு சூழலிலும் உதவியைக் கோருவது எப்போதுமே பொருத்தமாக இருக்கும்.

## இப்படி இருந்தால் என்ன செய்வது?

*நமது நடத்தை விதிக்கும், நான் வேலை செய்யும் நாட்டிலுள்ள சட்டத்திற்கும் இடையே முரண்பாடு உள்ளது. நான் என்ன செய்ய வேண்டும் என்று தெளிவாகத் தெரியவில்லை.*

கடுமையான தேவையைப் பின்பற்றுவது சிறந்த அணுகுமுறையாக இருக்கும். அதுவும் தெளிவின்றியிருந்தால், சட்டத் துறையின் உதவியைத் தேடுங்கள்.

## உங்கள் பொறுப்புகளை அறிந்து கொள்ளுங்கள்

### நமது நற்பெயர் உங்கள் கையில் உள்ளது.

நீங்கள் என்ன வேலை செய்கிறீர்கள், அல்லது எங்கு செய்கிறீர்கள் என்பது முக்கியமல்ல, நீங்கள் ஹெர்ஷே என்பதே உண்மை. ஒவ்வொரு வர்த்தக உறவையும், ஒவ்வொரு பரிவர்த்தனையையும், ஒவ்வொரு தயாரிப்பையும் கவனித்துக்கொள்ளும்போது, நீங்கள் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் எப்போதுமே நமது மதிப்பீடுகளைப் பிரதிபலிப்பதை உறுதி செய்யுங்கள். நமது நடத்தை விதிகளையும் கொள்கைகளையும், நீங்கள் வேலை செய்யும் நாட்டின் (அல்லது நாடுகளின்) சட்டங்களையும் ஒழுங்குமுறைகளையும் பின்பற்றி, நாம் இதுவரைக் கட்டியெழுப்பியவற்றை பாதுகாக்கவும். மேலும், உங்களுக்கு ஒதுக்கப்பட்ட பயிற்சியை நிறைவு செய்யுங்கள்—உங்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் விஷயங்களில் மேம்படுத்தலுடன் இருப்பதற்கான சிறந்த வழி இதுதான்.

ஏதாவது சட்டத்துக்குப் புறம்பான அல்லது நெறிமுறையற்ற நடவடிக்கையை நீங்கள் பார்த்தாலோ அல்லது சந்தேகித்தாலோ, அதைக் கண்டுகொள்ளாமலோ அல்லது வேறு யாரேனும் நடவடிக்கை எடுக்கட்டும் என்று அலட்சியமாகவோ இருக்க முடியும். ஆனால், தவறான நடத்தை நம் அனைவரையுமே பாதிக்கும். தெரிவிப்பதில் சிறிய கவலை என்று ஏதுமில்லை. உங்கள் கவலைகளை உடனடியாக பகிருங்கள், எந்தவொரு உள் விசாரணைக்கும் முழுமையாகவும் நேர்மையாகவும் ஒத்துழைப்புக் கொடுங்கள். நமது நடத்தை விதியை மீறும் எந்தவொருவரின் மீதும் ஹெர்ஷேயின் வேலையிலிருந்து நீக்கப்படுவது உட்பட சரிசெய்தல் நடவடிக்கை எடுக்கப்படலாம் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

நீங்கள் மற்றவர்களை நிர்வகிக்கும் பட்சத்தில் செய்தால், உங்களுக்கு இன்னும் அதிக பொறுப்பு இருக்கும். முன்னுதாரணமாக இருங்கள். நடத்தை விதியை உங்களுடைய குழு உறுப்பினர்கள் அறிந்து அவர்களுக்குரிய ஆதாரம் என்பதை உறுதி செய்யுங்கள். நீங்கள் செய்வதற்கும் அவர்களிடமிருந்து எதிர்பார்ப்பவற்றுக்கும் இடையில் எந்த வேறுபாடும் இல்லாதிருப்பதை உறுதி செய்யுங்கள். கேள்விகளையும், பிரச்சினைகளையும் தெரிவிப்பதை தொழிலாளர்கள் சங்கடமாக உணராதபடியான ஒரு பணியிடத்தை உருவாக்குங்கள். மற்றும் அவ்வாறு தெரிவிக்கப்படும்போது அவர்களுக்கு ஆதரவளியுங்கள். நன்னம்பிக்கையின் பேரில் தங்கள் கவலைகளை தெரிவிக்கும் தொழிலாளர்களை பழிவாங்கக் கூடாது, மற்றவர்கள் அவரைப் பழிவாங்குவதையும் தடுத்திடுங்கள்.

## பயமின்றிப் பேசுங்கள்

### பழிவாங்குதலை நாம் பொறுத்துக்கொள்வதில்லை.

நிறுவனம் என்ற முறையில், உங்கள் கவலைகளை முன்வந்து பகிருவதற்கு அதிக துணிச்சல் தேவை என்பதை அறிந்திருக்கிறோம். பெருவணிக நடவடிக்கைகள் பற்றி கேள்விகளை எழுப்பும் அல்லது கவலைகளை எழுப்பும் யார்மீதும் நாங்கள் பழிவாங்க மாட்டோம், பழிவாங்குவதையும் அனுமதிக்க மாட்டோம். சாத்தியமான தவறான நடத்தை அல்லது சட்ட மீறல்களைப் பற்றி எங்களிடம் அல்லது ஒரு அரசு அதிகாரியிடம் நன்னம்பிக்கையின் பேரில் புகார் தெரிவிக்கும் அல்லது தவறான நடத்தை அல்லது சட்ட மீறலையோ விசாரிப்பதில் உதவும் எந்தவோருவருக்கு எதிராகவும் நாங்கள் பழிவாங்கவோ அல்லது பழிவாங்குவதை அனுமதிக்கவோ மாட்டோம்.

யாரைத் தொடர்பு கொண்டாலும், நீங்கள் சரியான விஷயத்தைச் செய்கிறீர்கள் என்றும் உங்கள் கவலை உடனடியாகவும் உரிய முறையிலும் கையாளப்படும் என்றும் நம்புங்கள். முறையற்ற நடத்தை பற்றிய அறிக்கைகளை நாங்கள் முழுமையாக விசாரணை செய்வோம். அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நபருக்கு மட்டுமே பிரச்சினையின் தகவல் வெளிப்படுத்தப்படும்.

## இப்படி இருந்தால் என்ன செய்வது?

*ஒருவர் நடத்தை விதியை மீறுவதாக நான் சந்தேகப்படுகிறேன். ஆனால், உறுதியாக இல்லை. என்னுடைய இந்த சந்தேகங்களை எனக்குள்ளேயே வைத்துக்கொள்ள வேண்டுமா?*

இல்லை. ஒரு விதிமீறல் நடப்பதாக சந்தேகப்பட்டால், அதுபற்றிச் சொல்லுங்கள். ஒரு பிரச்சினை, மற்றவர்களை அல்லது நிறுவனத்தைப் பாதிக்கும் வரை காத்திருப்பதைவிட, வாய்ப்புள்ள பிரச்சினையை பற்றி தகவல் தெரிவிப்பதே சிறந்தது. விசாரணையின் பின்னர் நீங்கள் தவறாகப் புரிந்துகொண்டதாகத் தெரியவந்தாலும் கூட, உண்மையானது என நம்பும் ஒரு செய்தியை நேர்மையாகத் தெரிவிப்பதே 'நன்னம்பிக்கையின் பேரில்' அறிக்கையளித்தல் ஆகும்.

*கலாச்சார ரீதியாக, தலைமைப் பதவியில் உள்ள ஒருவருக்கு எதிராக முறையற்ற நடத்தை பற்றி அறிக்கை அளிப்பது பொதுவாக இருப்பதில்லை. நான் என்ன செய்ய வேண்டும்?*

உங்கள் கவலைகளைப் பற்றிக் கூறுவது முக்கியம். பிரச்சினைகளைப் பற்றி அறிக்கையிடல் செய்யப்படும்போது, ஹெர்ஷே அதன் பல்வேறுபட்ட தொழிலாளர்களையும், பல்வேறு கலாச்சார விதிகளையும் மதிக்கிறது. தகவலைத் தெரிவிப்பவர் பற்றிய அடையாளத்தையும் அவர் பகிர்ந்த தகவலையும் பாதுகாக்க எல்லா வகையான உரிய நடவடிக்கைகளையும் எடுக்கிறது.

# நீங்கள் ஹெர்ஷே.

## உதவிக்கு எங்கு செல்ல வேண்டும் என்று அறிந்து கொள்ளுங்கள்

### உங்களுக்கு உதவத் தயாராக சிலர் உள்ளனர்.

கேள்வியோ, பிரச்சினையோ அல்லது ஒரு கவலையோ உள்ளதா? பெரும்பாலான சமயங்களில், நீங்கள் முதலில் தொடர்பு கொள்ள வேண்டியவர் உங்கள் மேலாளராகவே இருப்பார். உங்கள் பிரச்சினையைப் புரிந்து கொள்வதற்கு ஏற்ற நிலையில் அவர் இருப்பதோடு உரிய நடவடிக்கை எடுக்கும் நிலையிலும் இருப்பார். உங்கள் மேலாளரிடம் அதுபற்றிப் பேச சங்கடமாக இருந்தாலோ அல்லது ஏற்கனவே ஒரு பிரச்சினையைப் பகிர்ந்திருந்து, அதற்கு அவர் சரியாகத் தீர்வளிக்கவில்லை என உணர்ந்தாலோ, மனிதவளத் துறை அதிகாரியையோ அல்லது நிர்வாகத்தின் வேறொரு உறுப்பினரையோ அல்லது கீழ்க்காண்பவர்களுள் ஒருவரையோ நீங்கள் தொடர்பு கொள்ளலாம்:

கூட்டாட்சி, அரசு அல்லது உள்ளூர் சட்டங்களின் சாத்தியமான மீறல்கள் பற்றி அரசு முகமைகளிடம் தெரிவிப்பதையோ அல்லது அரசு முகமைகளுக்குத் தகவல் அளிப்பதையோ, அரசு முகமைகளிடம் புகார் பதிவு செய்வதையோ அல்லது அரசு முகமைகளின் விசாரணைகளில் அல்லது செயல்முறைகளில் பங்கேற்பதையோ இந்த விதியில் எதுவும் தடுப்பதில்லை. மேலும், அத்தகைய எந்த தகவல் தொடர்பு பற்றியும் நிறுவனத்திற்குத் தெரிவிக்க வேண்டும் என்று விதி கூறுவதில்லை.

சட்டத் துறை

Law Department
The Hershey Company
100 Crystal A Drive
Hershey, PA 17033
USA

வெளிப்படுத்தல் குழு

நமது வெளிப்படுத்தல் குழுவுக்கு ஒரு குழுவாகவோ அல்லது எந்தவொரு தனி உறுப்பினர் மூலமோ, ஒரு முறையான கூட்டத்தின்போதோ அல்லது வேறு வகையிலோ தகவல் அளிக்கப்படலாம்.

எத்திக்கல் பிசினஸ் பிராக்டிசஸ் கமிட்டி (அறநெறிசார் வர்த்தக நடவடிக்கைக் குழு)

c/o General Counsel
The Hershey Company
100 Crystal A Drive
Hershey, PA 17033
USA

தணிக்கைக் குழு அல்லது தனித்தியங்கும் இயக்குநர்கள் வாரியம்

மின்னஞ்சல்:
auditcommittee@hersheys.com
c/o General Counsel
The Hershey Company
100 Crystal A Drive
Hershey, PA 17033
USA

### 'கன்செர்ன் லைனும்' உங்களுக்கு உதவத் தயாராக உள்ளது.

ஒரு தனித்த அறிக்கையிடல் சேவையால் இயக்கப்படும் இந்த 'கன்செர்ன் லைனை', எந்த சமயத்திலும் தொலைபேசி மூலமோ அல்லது இணையதளத்தின் மூலமோ தொடர்பு கொண்டு கேள்விகளை எழுப்பலாம் மற்றும் நமது நடத்தைவிதிகள், கொள்கைகள், நடைமுறைகள் அல்லது சட்டமீறல்கள் பற்றிய குற்றச்சாட்டுகளையும் எடுத்துரைக்கலாம். இரகசியமாக அறிக்கையை சமர்ப்பிக்கலாம்.

### *இணையத்தில் அறிக்கையளிக்க:*

www.HersheysConcern.com

### *தொலைபேசி வழியாக தெரிவித்தல்:*

நமது தளங்களிலிருந்து, லோக்கல் ஆக்சஸ் எண்களுக்கு கிளிக் செய்யவும்.

குறிப்பிட்ட சில நாடுகளில், கன்செர்ன் லைன் குறிப்பிட்ட சிலவகை நடத்தைகளுடன் (உதாரணமாக, நிதி, கணக்கியல், தணிக்கை அல்லது லஞ்சம் சார்ந்த விஷயங்கள்) சார்ந்த அறிக்கைகளை மட்டுமே ஏற்றுக்கொள்ளலாம். சட்டத் தேவைகளுக்கேற்ப நிறுவன அளவில் நீங்கள் கூறும் விஷயம் கையாளப்பட வேண்டுமாயின், கன்செர்ன் லைன் நிபுணர்கள் அந்த இடத்தின் நிர்வாகத்திற்கோ அல்லது மனிதவளத் துறையிடமோ செல்லுமாறு உங்களிடம் கூறலாம்.

தொலைபேசி மூலமாகவோ அல்லது இணையதளம் மூலமாகவோ கன்செர்ன் லைனை தொடர்பு கொள்ளும்போது, நீங்கள் பகிரும் தகவல்கள் இணையதள அடிப்படையிலான படிவத்தில் பதிவிடப்பட்டு நிறுவனத்திலுள்ள பொருந்தக்கூடிய நிபுணத்துவம் உள்ள நபரிடம் கொடுக்கப்பட்டு அந்தக் கேள்விக்கு அல்லது கவலைக்குத் திறம்பட பதிலளிப்பது உறுதி செய்யப்படும். அடுத்து, நிறுவனம் இதை மிக முக்கியமானதாக எடுத்து நீங்கள் சமர்ப்பித்த விஷயத்தின் இரகசியத் தன்மையைப் பராமரிக்க முயலும். உங்கள் கேள்வி அல்லது கவலையை நீங்கள் தெரிவித்த பின்னர், ஒரு குறிப்பு எண் (Case number) உங்களுக்குக் கொடுக்கப்படும். அதன் பிறகு அதுதான் உங்களுடைய உதவிக்குறிப்பு (Reference number) எண்ணாக இருக்கும். நீங்கள் சமர்ப்பித்த விஷயத்தைப் பற்றிய தகவலைப் பெற விரும்பினாலோ, சரிபார்க்க விரும்பினாலோ அந்த எண்ணையே நீங்கள் குறிப்பிட வேண்டும்.

# ஒரு நெறிமுறைசார்ந்த பணியிடத்தை நாங்கள் ஆதரிக்கிறோம்


மற்றவர்களுக்கு மதிப்பளித்திடுங்கள்

பாதுகாப்பான ஹெர்ஷேயை உருவாக்கிடுங்கள்

மனித உரிமைகளை நிலைநாட்டுங்கள்


## மற்றவர்களுக்கு மதிப்பளித்திடுங்கள்

நாம் இன்று வெற்றியாளர்களாக இருப்பதற்கு நமது தனிச்சிறப்புமிக்க தொழிலாளர்களே காரணம்.

நாம் அனைவரும் பல்வேறு கருத்துக்களையும், அனுபவத்தையும், பின்னணியும் கொண்டவர்கள் என்றாலும் நாம் அனைவருமே ஒரே குழுவைச் சார்ந்தவர்கள். நாம் ஒவ்வொருவரும் மற்றவருடைய பங்களிப்பை மதிக்கிறோம் மற்றும் வெற்றிபெறுவதற்கு அனைவருக்கும் சம வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்று நம்புகிறோம். நமது இலக்குகளை அடையவும் முன்முயற்சிகளை அதிகரிக்கவும் இது அவசியம். ஒரு நேர்மறையான சூழலை உருவாக்குவதன் மூலமும், சகதொழிலாளர்களின் பல்வேறு வலிமைகளையும் திறன்களைக் கண்டறிவதன் மூலமும் ஹெர்ஷேயை ஒரு பன்முகப்பட்ட, அனைத்தையும் உள்ளடக்கிய மற்றும் கண்ணியமான பணியிடமாக ஆக்குவதற்கான உங்கள் பங்களிப்பைச் செய்திடுங்கள்.

*நல்லதே ஆற்றல்மிக்கது*



- நீங்கள் எவ்வாறு நடத்தப்பட விரும்புகிறீர்களோ அதேபோன்று மற்றவர்களை நடத்துங்கள்.
- நமது பன்முகத்தன்மையைக் கொண்டாடுங்கள். பல்வேறுபட்ட கருத்துக்களைக் கேட்டு ஏற்றுக் கொள்ளுங்கள்.
- ஒருவரின் இனம், நிறம், பாலினம், தேசியம், வயது, சமயம், குடியுரிமை நிலை, ஊனம், மருத்துவ நிலை, பாலியல் நாட்டம், பாலின அடையாளம், முதுமை, திருமண நிலை அல்லது சட்டத்தால் பாதுகாக்கப்பட்டுள்ள எந்தவொரு பண்பின் அடிப்படையிலும் பாகுபாடு அல்லது துன்புறுத்தல் செய்யப்படுவதாகசந்தேகித்தாலோ அல்லது பார்த்தாலோ அதற்கு எதிராகப் பேசுங்கள்.
- துன்புறுத்துதல், மிரட்டல், மற்றும் உடல்ரீதியான, வார்த்தை ரீதியான அல்லது பார்வை ரீதியான மோசமான நடத்தை ஆகியவை இல்லாத ஒரு பணிச்சூழலை ஏற்படுத்துங்கள். நன்னம்பிக்கையின் பேரில் அறிக்கையளிக்கும் நபருக்கு எதிராக செய்யப்படும் பழிவாங்கும் செயலை ஹெர்ஷே ஒருபோதும் பொறுத்துக்கொள்ளாது என்ற உறுதிப்பாட்டுடன் உங்கள் பிரச்சனைகளை நீங்கள் பகிரலாம்.
- மேலும் அறிய:

- பாகுபாடு மற்றும் துன்புறுத்தல் தடுப்புக் கொள்கை
- பணிசெய்யும் இடத்தில் முறையற்ற நடத்தைக்கான கொள்கை

# நமது பன்முகத்தன்மையைக் கொண்டாடிடுங்கள்.

## இப்படி இருந்தால் என்ன செய்வது?

*என்னுடைய மேலாளர் அடிக்கடி கோபப்படுகிறார், காலக்கெடுவை நாங்கள் தவறவிடும்போது குழுவினர் மீது கோபப்பட்டு எரிந்து விழுகிறார். அது ஒரு துன்புறுத்துதலா?*

அது சூழலைப் பொறுத்தது. ஆனால், என்னவாக இருந்தாலும் அது ஒரு எதிர்மறையான சூழ்நிலையை உருவாக்குகிறது. இந்த நடத்தையை நிறுவனம் சரிசெய்யும். ஏனென்றால், கண்ணியமான பணியிடத்திற்கான வாக்குறுதியை இது மீறுகிறது. உங்கள் கவலைகளை மனிதவள அதிகாரியிடமோ, சட்டத் துறையிடமோ அல்லது கன்செர்ன் லைனிலோ தெரியப்படுத்துங்கள்.

*நமது சப்ளையர்களில் ஒருவர் என்னுடைய சக பணியாளர் மீது தரக்குறைவான மற்றும் அவரது வயதைக் குறிப்பிட்டு மோசமான வார்த்தைகளை பயன்படுத்துகிறார். நான் ஏதாவது சொல்ல வேண்டுமா?*

ஆம். உங்களுக்கு சிரமம் இல்லாத பட்சத்தில், அந்த சப்ளையரிடம் அதை நிறுத்துமாறு கூறுங்கள். விரும்பினால், உங்கள் மேலாளரிடம், சட்டத் துறையிடம் அல்லது கன்செர்ன் லைனில் அதுபற்றித் தெரிவியுங்கள். தொழிலாளர், வாடிக்கையாளர், சப்ளையர் அல்லது நமது பணித்தளத்தில் (அல்லது வேலை சம்பந்தமான நிகழ்வில்) உள்ள எந்தவொருவராலும் அல்லது இந்த யார்மீதும் செய்யப்படும் எந்தவிதமான துன்புறுத்துதலையும் சகித்துக் கொள்வதில்லை.

# பாதுகாப்பான ஹெர்ஷேயை உருவாக்கிடுங்கள்

## ஒவ்வொரு தொழிலாளரின் பாதுகாப்பையும் நாம் மதிக்கிறோம்.

நாம் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் பாதுகாக்கிறோம். நமது பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றுகிறோம் மற்றும் பாதுகாப்பான கலாச்சாரத்தை ஊக்குவிக்கிறோம். ஏனென்றால், நம் தொழிலாளர்கள்தான் நமது மிகப்பெரிய சொத்து. ஒருவருடைய பணி, பதவி அல்லது பொறுப்பு என்னவாக இருந்தாலும், மக்களின் பாதுகாப்புக்காக உடனடி நடவடிக்கை எடுப்பதற்கு ஒவ்வொரு தொழிலாளருக்கும் உரிமை அளிக்கப்பட்டுள்ளது. மற்றவர்களை ஆபத்துக்குள்ளாக்கும் ஒரு சூழலை நீங்கள் பார்த்தால், உடனடியாக நடவடிக்கை எடுங்கள். எல்லா நேரங்களிலும், எல்லா இடங்களிலும், உங்களுக்கும், சகதொழிலாளருக்கும் காயமேற்படாமல் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

வன்முறை நடவடிக்கை அல்லது அச்சுறுத்தல்களை துளிகூட பொறுத்துக்கொள்ளாதீர்கள். உங்களைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதைப் பற்றி விழிப்பாக இருங்கள். நல்ல பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றுங்கள். வன்முறைக்கான வாய்ப்பு இருந்தால், அதுபற்றிப் பேசுங்கள். உள்ளூர் சட்ட விதிகளுக்கு உட்பட்டு நிறுவன உடைமைகளில் ஆயுதங்களைத் தடை செய்துள்ளோம். யாரிடமாவது ஆயுதம் உள்ளதாக நீங்கள் சந்தேகித்தால், உங்கள் மேலாளரிடமோ, நமது கார்ப்பரேட் செக்கியூரிட்டி டீமின் ஒரு உறுப்பினரிடமோ அல்லது கன்செர்ன் லைனிடமோ உடனடியாகத் தெரிவியுங்கள்.

மதுவையோ அல்லது சட்டத்துக்கு எதிரான மருந்துகளையோ வைத்திருப்பது, பயன்படுத்துவது அல்லது பகிர்வதை நம் கொள்கைகள் தடுக்கின்றன. ஏனென்றால் போதை மருந்துகள் உங்கள் முடிவெடுக்கும் திறனையும், செயல்திறனையும் உங்களுடன் பணிசெய்யும் மற்றவர்களின் பாதுகாப்பையும் பாதிக்கும். நிறுவனத்தின் வர்த்தகச் செயல்பாடுகளின் போது மது பானங்களை அருந்துவது அனுமதிக்கப்படும் சம்பவங்கள் உண்டு. ஆனால், சட்டங்களையும் நிறுவனத்தின் எல்லா கொள்கைகளையும் கோட்பாடுகளையும் பின்பற்றுவதை உறுதி செய்யுங்கள். அளவோடு அருந்துவதும் நல்ல மனநிலையில் இருப்பதும் எப்போதும் நல்லது.



### *நல்லதே ஆற்றல்மிக்கது*



- உங்களின் சொந்தப் பாதுகாப்பையும் மற்றவர்களின் பாதுகாப்பையும் உறுதி செய்வதில் செயலூக்கத்தோடு ஈடுபடுங்கள்.
- பயிற்சியின் தேவை?அதைக் கடைபிடியுங்கள். பாதுகாப்பு சாதனங்கள்? அணியுங்கள். பாதுகாப்பற்ற நிலையா? உடனடியாகத் தெரிவியுங்கள்.
- மேலும் அறிய:

- போதைப்பொருள் இல்லா பணியிடக் கொள்கை

## இப்படி இருந்தால் என்ன செய்வது?

*என்னுடைய சகதொழிலாளருக்கு குடிப்பழக்கம் பிரச்சினையாக இருக்கிறது என்று சந்தேகப்படுகிறேன். அது எனக்குக் கவலையளிக்கிறது. நான் என்ன செய்ய வேண்டும்?*

அவருடைய பாதுகாப்போ உங்கள் பாதுகாப்போ எதுவாக இருந்தாலும், பாதுகாப்பு என்று வரும்போது ஒருபோதும் சமரசம் செய்யாதீர்கள். உங்கள் மேலாளரிடம் அல்லது மனிதவள அதிகாரியிடம் உங்கள் கவலைகளைத் தெரிவித்து அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஹெர்ஷேக்கு வாய்ப்பளியுங்கள். அவரை நமது தொழிலாளர் உதவித் திட்டத்தில் சேருங்கள்.

## மனித உரிமைகளை நிலைநாட்டுங்கள்

**நாம் செயல்படும் எல்லா இடங்களிலும் நியாயமான பணியமர்த்தல் நடைமுறைகளை செய்ய கடமைப்பட்டுள்ளோம்.**

ஒரு நிறுவனம் என்ற முறையில், ஒவ்வொரு தனிநபரின் உரிமைகளையும் மதிக்கிறோம். நாம் செயல்படும் சந்தைகளில் உள்ள தொழிலாளர் சட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடக்கிறோம். ஐக்கிய நாடுகள் அவையின் அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தின்கீழ் நிறுவப்பட்டுள்ள கோட்பாடுகளுக்கு நாம் ஆதரவளிக்கிறோம். (குழந்தைத் தொழிலாளர் உட்பட) குழந்தைகளைத் தன்னல நோக்கில் பயன்படுத்துதல், உடல்ரீதியாக தண்டனையளித்தல், கொத்தடிமை அல்லது சிறைப்படுத்தி வேலை வாங்குதல் அல்லது குழந்தைக் கடத்தல் போன்றவற்றில் ஈடுபடும் எந்தவொரு தனிநபரோடும் அல்லது நிறுவனத்தோடும் தெரிந்தே நாங்கள் வர்த்தகத்தில் ஈடுபடுவதில்லை.

நமது சப்ளையர்களும் நமது உறுதிப்பாட்டைப் பகிர்ந்துகொண்டு அதே அளவு உயர்ந்த தரத்தைப் பேண வேண்டும் என எதிர்பார்க்கிறோம். நமது வழங்கல் சங்கிலியிலிருந்து சட்டவிரோத தொழிலாளர் முறையை ஒழிக்கும் நம் உறுதிப்பாட்டின் ஓர் அங்கமாக, உழைப்பாளர் உரிமை மீறலுக்கு வித்திடும் அடிப்படைச் சூழல்களை மாற்றும் நோக்கில் திட்டங்களை தொடர்ந்து உருவாக்கி விரைவுபடுத்துகிறோம். நாம் எடுக்கும் முயற்சிகளைப் பற்றி மேலும் தெரிந்துகொள்ள, நமது பெருநிறுவன சமூகப் பொறுப்பு அறிக்கையைப் பார்க்கவும். நமது சப்ளையர் நடத்தை விதி நமது வாக்குறுதியை மேலும் வலுவாக்குகிறது.

நீங்கள் என்ன செய்யலாம்? நீங்கள் எங்கு வேலை செய்கிறீர்களோ அந்த இடத்தில் உள்ள தொழிலாளர் நலச் சட்டங்களைப் பின்பற்றுங்கள், மோசடி பற்றிய விழிப்புணர்வுடன் இருங்கள். தொழிலாளர் சட்ட மீறல் அல்லது மனித உரிமைகள் மீறல்களைக் கண்டாலோ அல்லது சந்தேகித்தாலோ அதுபற்றித் தெரிவியுங்கள்.

### *நல்லதே ஆற்றல்மிக்கது*



- மற்றவர்களை மரியாதையோடும் கண்ணியத்தோடும் நடத்துங்கள்.
- மனித உரிமை மீறல்களில் ஈடுபடாதீர்கள், அல்லது அப்படிப்பட்டவர்களோடு எந்தவித வர்த்தகத் தொடர்பும் வைத்துக் கொள்ளாதீர்கள்.
- மேலும் அறிய:

- மனித உரிமைகள் கொள்கை

### *ஒரு பகிரப்படும்* வாக்குறுதி

நமது வர்த்தகம் ஒரு நீண்டகால, பரஸ்பரம் சார்ந்திருக்கும் வழங்கல் சங்கிலியின் மீது கட்டமைக்கப்பட்டுள்ளது. இதில் உள்ள ஒவ்வொரு இணைப்பும் திடமானதாகவும் பலமானதாகவும் இருக்க வேண்டும் என விரும்புகிறோம். சர்வதேசத் தொழிலாளர் அமைப்பின் உடன்படிக்கை 138 மற்றும் 182-ல் வரையறுக்கப்பட்டுள்ளபடி மிக மோசமான குழந்தைத் தொழிலாளர் முறைகளை துளிகூட சகித்துக் கொள்வதில்லை. இத்தகைய நடவடிக்கைகள் எங்கிருந்தாலும் அவற்றை அகற்றுவதற்கான தொழில்துறை முயற்சிகளில் சப்ளையர்கள் ஆதரவளிக்க வேண்டும் என்றும், பங்கேற்க வேண்டும் என்றும் நாம் எதிர்பார்க்கிறோம். ஒவ்வொரு தனிநபரின் உரிமைகளையும் நாம் மதிக்கிறோம். ஹெர்ஷேயினால் அமர்த்தப்பட்டுள்ள எந்தவொரு நபரும் அல்லது ஹெர்ஷேயின் சப்ளையர்களும் மரியாதையோடும், கண்ணியத்தோடும் நடத்தப்பட வேண்டும் என்பதை நம்புகிறோம். உரிய சட்டத்தின்படி நியாயமான ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்றும், பாதுகாப்பான வேலை செய்யும் சூழல் உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் விரும்புகிறோம்.



# மற்றவர்களுக்கான நமது பொறுப்புகளை நாம் உணர்கிறோம்

தயாரிப்பின் தரத்தையும் பாதுகாப்பையும் பேணிடுங்கள்

தனிப்பட்ட தகவல்களை அந்தரங்கமாக வைத்திருங்கள்

நமது பங்குதாரர்களுக்கு மதிப்பளியுங்கள்

## தயாரிப்பின் தரத்தையும் பாதுகாப்பையும் பேணிடுங்கள்

நமது தயாரிப்புகள் என்று வரும்போது, நாம் ஒருபோதும் சமரசம் செய்துகொள்வதில்லை.

உறையின்மீது 'ஹெர்ஷே' என்பதை நுகர்வோர் பார்க்கும்போது, அவர்கள் பாதுகாப்பான, உயர் தரமான தயாரிப்பைப் பெறுகின்றனர் என்பதை அவர்கள் அறிவார்கள். அவர்களின் நம்பிக்கையைப் பாதுகாக்க நாங்கள் விரும்புகிறோம். தயாரிப்பின் தரம் மற்றும் பாதுகாப்பு பற்றி மிக மிக கவனமாக இருக்கிறோம். நமது தயாரிப்புகள் நமது சொந்த உள்ளகத் தரநிலைகளையும், சட்டம் நிர்ணயித்துள்ள தரநிலைகளையும் பூர்த்தி செய்வதை அல்லது அதைவிடச் சிறப்பாக இருப்பதை உறுதி செய்கிறோம்.

ஒவ்வாமை ஏற்படுத்தும் பொருட்கள் உணவுப் பாதுகாப்பு அபாயத்தை அளிக்கின்றன. எனவே, அவற்றிலிருந்து நுகர்வோரைப் பாதுகாக்க நாம் கண்டிப்பான கொள்கைகளைக் கொண்டிருக்கிறோம். உற்பத்திப் பாதுகாப்பு நம் அனைவரையும் சார்ந்திருக்கிறது. எந்தவொரு முக்கிய ஒவ்வாமை ஏற்படுத்தும் பொருட்களின் குறுக்கீட்டையும் தடுப்பதில் நீங்கள் முக்கியமான பணியை ஆற்றுகிறீர்கள். மூலப்பொருட்களின் பாதுகாப்பான சேமிப்பு, தயாரிப்பு லேபிளிங் மற்றும் முறையான சுத்தம் ஆகியவற்றை உறுதி செய்ய நமது ஒவ்வாமைப் பொருட்கள் தடுப்புத் திட்டத்தைப் பின்பற்றுங்கள். ஒவ்வாமையளிக்கும் பொருட்களுடன் தொடர்பு கொள்ளக்கூடிய எந்தவொரு சாதனத்தையும் கிருமிநீக்கம் செய்யும் நடைமுறைகளையும் உறுதி செய்யுங்கள்.

தயாரிப்பின் தரத்தையும் பாதுகாப்பையும் நெருக்கமாகக் கண்காணிப்பதற்கும், சட்டத்துடன் இணங்கி இருப்பதை உறுதி செய்வதற்கும், மற்றும் தயாரிப்பின் தரம் மற்றும் பாதுகாப்பு அபாயங்களை அடையாளம் காண்பதற்கு நமது நீட்டிக்கப்பட்ட வழங்கல் சங்கிலியை மதிப்பிடுவதற்கும் நமது புராடக்ஸ் எக்ஸலன்ஸ் புரோகிராம் (PEP) உதவுகிறது. நமது வாடிக்கையாளர்களுக்கு நாம் செய்யும் வாக்குறுதியை மதியுங்கள். நமது சப்ளையர்களையும் பொறுப்பாக்குங்கள்.

## *நல்லதே ஆற்றல்மிக்கது*

- தயாரிப்பின் தரத்தையும் பாதுகாப்பையும் வலியுறுத்தவும். நமது கடுமையான தரக் கட்டுப்பாட்டு நடைமுறைகளைப் பின்பற்றவும்.
- ஒரு வாடிக்கையாளர் புகார் பற்றியோ அல்லது தரம், பாதுகாப்பு அல்லது நம்பத்தன்மை பிரச்சினை பற்றியோ உங்களுக்குத் தெரியவந்தால், உங்கள் மேலாளரிடமோ அல்லது பிற நிறுவன அதிகாரிகளிடமோ அதுபற்றி உடனடியாகத் தெரிவியுங்கள்.
- மேலும் அறிய:

- ஒவ்வாமையளிக்கும் பொருள் பற்றிய கொள்கை
- QRC-கான அகஇணையதளம்

## இப்படி இருந்தால் என்ன செய்வது?

*ஒரு தயாரிப்பின் மீது நாம் செய்யும் பரிசோதனைகளுள் ஒன்று, உற்பத்தியின் அடுத்தடுத்த கட்டங்களிலும் மீண்டும் மீண்டும் செய்யப்படுகிறது. முதல் பரிசோதனையை நாம் ஏன் விட்டு விடக்கூடாது? அது நமது உற்பத்தியின் வேகத்தை அதிகரிக்க உதவுமே?*

தேவைப்படும் ஒரு பரிசோதனையை விட்டுவிடுவது ஒருபோதும் சரியாக இருக்காது. செயல்திறனை அதிகரிக்க உங்களிடம் ஏதாவது யோசனைகள் இருந்தால், அவற்றைப் பகிர்வது மிகவும் நல்லது. அந்த செயல்முறை மதிப்பிடப்பட்டு திருத்தியமைக்கப்பட்டாலன்றி, தேவைக்கேற்றவாறு ஒவ்வொரு படியையும் செய்வது என்பது முடியாத காரியம். பாதுகாப்பான, உயர் தரமான தயாரிப்பினை எப்போதும் நாம் அளிப்பதற்கு, தேவைக்கேற்ப ஒவ்வொரு கட்டத்தையும் நிறைவு செய்வது முக்கியம்.



## தனிப்பட்ட தகவல்களை அந்தரங்கமாக வைத்திருங்கள்


### தங்களுடைய தனிப்பட்ட தகவல்களைப் பாதுகாப்போம் என்று மக்கள் நம்மை நம்புகின்றனர்.

நம் நுகர்வோர்கள், வாடிக்கையாளர்கள், சகபணியாளர்கள் மற்றும் நாம் வர்த்தகம் செய்கின்ற மற்ற தரப்புகளின் தனியுரிமையை நாம் மதிக்கிறோம் மற்றும் நம்முடைய தனிப்பட்ட தகவல்களை கவனமாகக் கையாள்கிறோம். “தனிப்பட்ட தகவல்” என்பது பெயர், தொழிலாளர் அடையாளம், மின்னஞ்சல் முகவரி அல்லது தொலைபேசி எண் போன்ற ஒருவரை அடையாளம் காணப் பயன்படும் எந்தவொரு தகவலையும் குறிக்கும். தனிப்பட்ட தகவல்களை எப்படிச் சேகரிப்பது, பாதுகாத்து வைப்பது, பயன்படுத்துவது, பகிர்வது, அனுப்புவது மற்றும் அழிப்பது என்பதைக் குறிப்பிடும் தரவுக் இரகசியச் சட்டங்கள் உள்ளன. நாம் பணி செய்யும் எல்லா இடங்களிலும் அந்தச் சட்டங்களைக் கடைபிடிக்க முயற்சிக்கிறோம்.

நமது கொள்கைகளைக் கடைபிடித்து, உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள எந்தவொரு தனிப்பட்ட தகவலையும் பாதுகாத்திடுங்கள். அதை எப்படிப் பயன்படுத்த வேண்டுமோ அப்படியே பயன்படுத்துங்கள். நிறுவனத்திற்குள்ளேயோ வெளியிலோ அங்கீகரிக்கப்படாத முறையில் பகிர்ந்து கொள்ளாதீர்கள்.

சிறந்த சைபர் பாதுகாப்பினையும் கடைபிடியுங்கள். நமது நெட்வொர்க்குகள், கணினிகள், புரோகிராம்கள், மற்றும் தரவுகளை வைரஸ் தாக்குதல், சேதம் அல்லது அதிகாரமற்ற அணுகுதல்களிலிருந்து பாதுகாப்பதற்காக வகுக்கப்பட்டுள்ள செயல்முறைகளையும் நடைமுறைகளையும் பின்பற்றுவதை உறுதி செய்யுங்கள்.

### *நல்லதே ஆற்றல்மிக்கது*



- "தனிப்பட்ட தகவல்” எனக் கருதப்படும் தகவலின் தன்மைகளை அறிந்து கொள்ளுங்கள்.
- நீங்கள் வேலை செய்யும் நாட்டில் அல்லது நாடுகளில் உள்ள இரகசியம் சார்ந்த சட்டங்களையும் ஒழுங்குமுறைகளையும் பின்பற்றுங்கள்.
- தனிப்பட்ட தகவல்களையும் தொழிலாளர் பற்றிய தகவல்களையும் உரிமையில்லாமல் வெளிப்படுத்துவதிலிருந்து பாதுகாத்திடுங்கள். ஏதாவது விதிமீறல்கள் இருந்தால் உடனடியாக சட்டத் துறையிடம் தெரிவியுங்கள்.
- மேலும் அறிய:

- நிறுவனத்தின் இரகசியத் தகவல் கொள்கை
- ஏற்கத்தக்க பயன்பாட்டுக் கொள்கை

### இப்படி இருந்தால் என்ன செய்வது?

*நமது புதிய விற்பனையாளர் ஒருவர், ஒரு கூப்பனையும், தங்கள் தயாரிப்பின் இலவச மாதிரியையும் எனது குழுவிலுள்ள எல்லோருக்கும் கொடுத்து தன்னை அறிமுகப்படுத்திக்கொள்ள விரும்புகிறார். என்னுடைய சகதொழிலாளர்களின் பெயர்களின் பட்டியலையும் முகவரிகளையும் அந்த விற்பனையாளர் என்னிடம் கேட்டார். அவரிடம் அவற்றை அளிப்பது சரிதானா?*

எதையும் செய்வதற்கு முன்னர், சட்டத்துறையைத் தொடர்பு கொள்ளுங்கள். அந்த கோரிக்கையின் நோக்கம் நல்லதாகத் தோன்றினாலும், சக பணியாளர்கள் மாதிரிகளைப் பெற விரும்பினாலும், இந்தத் தகவலை அளிப்பது என்பது இரகசியத் தகவல்களை அந்தரங்கமாக வைத்திருக்கும் நமது வாக்குறுதியை மீறும் செயலாக அமையும்.



## நமது பங்குதாரர்களுக்கு மதிப்பளியுங்கள்

### நாம் வர்த்தக உறவுகளை மதிக்கிறோம். நல்ல, பொறுப்புள்ள பங்குதாரராக வேலைசெய்ய விரும்புகிறோம்.

உலகம் முழுவதும் உள்ள சப்ளையர்களோடு நாம் செயல்படுகிறோம். நாம் யார், நாம் என்ன செய்கிறோம் என்பதற்கு மையமாக இருப்பது பொறுப்புள்ள கொள்முதல் ஆகும். எனவே நாம் உருவாக்கும் உறவுகள் பரஸ்பர மரியாதை மற்றும் நம்பிக்கையின் அடிப்படையில் இருப்பதை உறுதி செய்யுங்கள். சரியான பங்குதாரர்களைத் தேர்ந்தெடுத்து, தரம், சேவை, விலை, கிடைக்கும் தன்மை மற்றும் நம்பத்தன்மையின் அடிப்படையில் நடுநிலையோடு முடிவுகளை எடுங்கள். நமது சப்ளையர்கள் ஹெர்ஷேயின் உயர்தரத்தைப் பராமரிக்கும் வகையில் உங்கள் பங்களிப்பைச் செய்யுங்கள். அவர்கள் அறநெறியோடு சட்டத்திற்கு இணங்கியும், நமது நடத்தை விதிகள், கொள்கைகள் மற்றும் மதிப்பீடுகளுக்கு ஏற்ப இயங்குவதையும் உறுதிப்படுத்துங்கள். நமது சப்ளையர் நடத்தை விதிகள் நமது எதிர்பார்ப்புகளை தெளிவுபடுத்துகின்றன.

உலகெங்கிலுமுள்ள கூட்டாட்சி, மாகாணம் மற்றும் உள்ளூர் அரசுகளுடனும் நாம் வேலை செய்கிறோம். அரசு ஒப்பந்தங்களின் கீழான தேவைகள் பொதுவாக நமது பிற ஒப்பந்தங்களைவிட அதிக கண்டிப்பானதாக இருக்கும். நமது பிற ஒப்பந்தங்களைப் போன்றே அரசு ஒப்பந்தங்களில் உள்ள விதிகளையும் நாம் பின்பற்றுகிறோம். அறநெறி விதிகளை உடைத்து குறுக்குவழியை ஒருபோதும் பின்பற்றுவதில்லை. அரசுக்கு விற்பனை செய்வதில் ஈடுபட்டாலும், அரசுக்காக வேலை செய்தாலும் அல்லது அரசு ஒப்பந்தத்தை நிர்வகிப்பதாக இருந்தாலும், எப்போதும் தொழிலை நேர்மையாகவும், நியாயமாகவும் ஒளிவுமறைவின்றியும் செய்யுங்கள்.


அரசு ஆய்வுகள், விசாரணைகள் அல்லது தகவல் கோரிக்கைகளுக்கு இணங்கி ஒத்துழைப்பு கொடுங்கள். அரசு அலுவலர் ஒருவரால் நீங்கள் தொடர்புகொள்ளப்பட்டால், அந்த நபரை மரியாதையோடு சட்டத் துறையிடம் அனுப்புங்கள். அரசின் கோரிக்கைக்குப் பதிலளிக்க உதவும் பொறுப்பில் நீங்கள் இருந்தால், உண்மையைக் கூறுங்கள். யாரையும் தவறாக வழிநடத்தாதீர்கள், அவர்களுடைய வேலையில் தடையாக இருக்காதீர்கள், ஆவணங்களை அழிக்கவோ அல்லது மாற்றவோ செய்யாதீர்கள்.

### இப்படி இருந்தால் என்ன செய்வது?

*நாம் இயங்குவதற்குத் தேவையான குறிப்பிட்ட உரிமங்களை நமக்கு அளிப்பதன் ஒரு பகுதியாக நமது தொழிற்சாலையை ஆய்வு செய்வதற்காக FDA-யின் ஒரு உறுப்பினர் வருகிறார். நான் என்ன செய்ய வேண்டும்?*

ஆய்வைப் பற்றிய விவரங்களைச் சேகரியுங்கள். அதன்பின்னர், FDA ஆய்வாளரிடம் உரிய நேரத்தில் அவருடைய கோரிக்கைக்கு நிறுவனம் பதிலளிப்பதை உறுதி செய்ய உங்களால் செய்ய முடிந்ததைச் செய்வதாக அவருக்கு விளக்கிவிட்டு சட்டத்துறையைத் தொடர்புகொள்ளுங்கள்.

### *நல்லதே ஆற்றல்மிக்கது*



- நீங்கள் சப்ளையர் உறவுக்குப் பொறுப்பானவர் என்றால்:
  - நமது கொள்முதல், சோர்சிங் மற்றும் டியூ டெலிஜென்ஸ் (கான்ஃபிளிக்ட் மினரல்களை வெளிப்படுத்துதல் உட்பட) செயல்முறைகள் மற்றும் நடைமுறைகளைப் பின்பற்றுங்கள்.
  - நமது சப்ளையர் நடத்தை விதிகளுக்கு இணங்கி நடக்க வேண்டியதன் நோக்கத்தைப் பற்றி சப்ளையர்கள் அறிந்திருப்பதை உறுதிப்படுத்துங்கள்.
  - சப்ளையர்கள் தங்களுடைய கடமைகளை நிறைவேற்றுவதையும், நாம் நமது கடமைகளை நிறைவேற்றுவதையும் உறுதிப்படுத்துங்கள் மற்றும் ஒப்பந்தப்படியான உடன்பாடுகளைக் கண்காணியுங்கள்.
  - நமது உயர்தரங்களின்படி இல்லாத எந்தவொரு நடத்தையைப் பற்றியும் தகவலளியுங்கள்.
- நீங்கள் ஒரு அரசு ஒப்பந்தத்திற்குப் பொறுப்பானவராக இருந்தால்:
  - இந்த வேலை சம்பந்தமான தனித்துவமான சட்டத் தேவைகளையும் கட்டுப்பாடுகளையும் அறிந்து பின்பற்றுங்கள்.
  - நமது ஒப்பந்தங்களோடு இணைந்துள்ள அரசால் அளிக்கப்பட்ட சொத்துகள் அல்லது எந்தவொரு வகைப்படுத்தப்பட்ட தகவலையும் பாதுகாத்திடுங்கள்.
  - நமது அரசு ஒப்பந்தங்களை அபாயத்திற்குள்ளாக்கும் எந்த ஒரு நடவடிக்கை பற்றியும் பேசுங்கள்.
- கொள்முதல் நேர்மையைக் கடைபிடியுங்கள். ஒருபோதும் இவற்றைச் செய்யாதீர்கள்:
  - ஒரு ஒப்பந்தம் அளிக்கப்படுவதற்கு முன்னர் இரகசிய அல்லது மூலத்தகவலைக் கேட்பது.
  - மற்ற ஒப்பந்ததாரர்களின் தனிப்பட்ட ஏலம் அல்லது முன்மொழிவுத் தகவல்களைப் பயன்படுத்துவது.
  - அரசு கொள்முதல் அதிகாரிகளிடம் வேலைவாய்ப்பு அல்லது வர்த்தக வாய்ப்புகள் பற்றிப் பேசுவது.
- ஹெர்ஷேயின் சார்பாக நீங்கள் சமர்ப்பிக்கும் பிரதிநிதித்துவங்கள், அறிக்கைகள் மற்றும் பிற தகவல்கள் துல்லியமானதாகவும் உண்மையானதாகவும் இருப்பதை உறுதி செய்யுங்கள்.
- மேலும் அறிய:

- சப்ளையர் நடத்தை விதி
- மூன்றாம் தரப்பு இணக்கம், டியூ டெலிஜென்ஸ் (உரிய முயற்சி) கொள்கை மற்றும் நடைமுறைகள்

# சரியான விஷயங்களை நாம் செய்கிறோம்

லஞ்சம் அளிப்பதில்லை

அன்பளிப்புகள் மற்றும் பொழுதுபோக்கு பற்றிய விதிகளை அறிந்து கொள்ளுங்கள்

நியாயமாக போட்டியிடுங்கள்

நிறுவனத்தின் பொதுவானதல்லாத தகவல்களை கொண்டு வணிகம் செய்யாதீர்கள்

துல்லியமான பதிவேடுகளை வைத்திருங்கள்

இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் வர்த்தக இணக்க விதிகளைப் பின்பற்றுங்கள்

## லஞ்சம் அளிப்பதில்லை

### நமது தயாரிப்புகளின் தரத்தின் அடிப்படையிலேயே நாம் வர்த்தகம் செய்கிறோம்.

அந்தக் கொள்கையின்படிதான் எம்முடைய முதல் விற்பனையே செய்யப்பட்டது. அப்படித்தான் இன்றுவரை தொடர்ந்து நமது வர்த்தகத்தை நடத்தி வருகிறோம். நேர்மையாகவும் ஒருங்கிணைப்போடும் செய்யுங்கள். லஞ்சம் கொடுக்கவோ, வாங்கவோ செய்யாதீர்கள் அல்லது மற்றவர்கள் உங்களுக்காக லஞ்சம் கொடுப்பதை அனுமதிக்காதீர்கள். நமது சார்பாக வர்த்தகம் செய்யும் மற்றவர்கள் லஞ்சம் கொடுப்பதைத் தடுப்பதற்கான அனைத்தையும் செய்யுங்கள். ஒரு நிறுவனம் என்ற முறையில், நமது செயல்களுக்கு மட்டுமல்லாது நம்மைப் பிரதிநிதித்துவம் செய்யும் மூன்றாம் தரப்பினரின் செயல்களுக்கும் நாமே பொறுப்பாகிறோம்.

நினைவில் கொள்ளவும், லஞ்சம் என்பது ரொக்கமல்லாது பிற வகைகளிலும் இருக்கலாம். ஒரு தீர்மானத்துக்குப் பதிலீடாக வழங்கப்படும் பட்சத்தில், அன்பளிப்பு, உதவி, கடனளித்தல் அல்லது வேலை வழங்குதல் போன்றவை லஞ்சமாகக் கருதப்படலாம். மதிப்புமிக்க எதையும் அளிக்க முன்வருவதற்கு முன்னர், நமது கொள்கைகளை வாசித்து எது சரி (மற்றும் எது சரியல்ல) என்ற கேள்விகளைக் கேட்டுக்கொள்ளுங்கள்.

சில நாடுகளின் சட்டங்கள் அரசு அதிகாரிகளுக்கு லஞ்சம் அளிப்பதற்கு கடுமையான தண்டனைகளை விதிக்கின்றன. ஆனால், நம்மைப் பொறுத்தவரை, எளிமையாகக் கூறவேண்டுமானால்: லஞ்சம் யார் அளித்தாலும், எந்த நிறுவனத்தில் நடந்தாலும், எந்த மட்டத்தில் என்றாலும், எப்போதுமே அது தவறுதான்.

## நல்லதே ஆற்றல்மிக்கது

- ஒரு லஞ்ச நடவடிக்கையைப் பார்க்கும்போது அது லஞ்சம்தான் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.
- நீங்கள் வேலை செய்யும் நாட்டுச் சட்டங்களையும், அதன் தேவைகளையும் பின்பற்றுங்கள். முறையற்ற நடவடிக்கைகளை தொடக்கத்திலேயே தடுத்திடுங்கள்
- நம் சார்பாக வர்த்தகம் செய்யும் மூன்றாம் தரப்பிடம் நமது எதிர்பார்ப்புகளை தெளிவாக அமைத்து, அவர்களுடைய வேலையை எப்போதும் கண்காணியுங்கள்.
- பணம் செலுத்துதல்களையும் செலவுகளையும் பதிவு செய்யும்போது துல்லியமாகவும் முழுமையாகவும் செய்திடுங்கள்.
- (அரசு ஊழியரிடமிருந்து வழக்கமான சேவைகளைப் பெறுவதற்காக) "ஊக்கமளிப்புத் தொகை அல்லது கையூட்டு" போன்றவற்றைக் கொடுக்காதீர்கள்.
- லஞ்ச நடவடிக்கையைப் பார்த்தாலோ அல்லது சந்தேகித்தாலோ அதற்கு எதிராகப் பேசுங்கள்.
- மேலும் அறிய:

- ஊழல் தடுப்பு இணைக்கக் கொள்கை

## இப்படி இருந்தால் என்ன செய்வது?

*நமது நிறுவனத்தில் இன்டர்ன்ஷிப் பெறுவதற்கு தனது மகளுக்கு உதவ முடியுமா என்று ஒரு அரசு ஊழியர் என்னிடம் கேட்டார். எனக்குத் தேவையானதை அவர் செய்து தருவதாகக் கூறுகிறார்.*

அதைச் செய்யாதீர்கள். “உங்களுக்குத் தேவையானதைச் செய்தல்” என்பதற்கு அந்த அரசு ஊழியர் அந்த உதவிக்கு மாற்றாக ஏதோ ஒரு தவறான விஷயத்தைத் திட்டமிடுகிறார் என்று அர்த்தம். மற்ற எல்லா விண்ணப்பதாரர்களும் செய்வது போன்று அவருடைய மகளையும் விண்ணப்பிக்குமாறு கூறி இன்டர்ன்ஷிப் பற்றிய விவரங்களை அந்த அரசு ஊழியருக்குக் கொடுக்கலாம். அதற்கும் மேற்பட்ட எந்தவொரு விஷயமும் லஞ்சமாகவே கருதப்படும்.

## ஒரு பகிரப்படும் வாக்குறுதி

லஞ்சம் நமது நன்மதிப்பினை பாதிக்கக்கூடும் என்பது நமக்குத் தெரியும். ஆனால், அது அதனையும் தாண்டிய ஒரு பிரச்சினையாகவும் இருக்கலாம். உலகச் சந்தையிலும், நாம் வாழ்கின்ற மற்றும் பணிபுரிகின்ற சமூகங்களிலும் லஞ்சமும் ஊழலும் நியாயமற்ற போட்டிக்கும், பாதுகாப்பற்ற தயாரிப்புகளுக்கும் வழிவகுக்கும் என்பதை நாம் அறிவோம். நம்மைப் பொறுத்தவரை, ஊழலை சகித்துக்கொள்ளாமல் இருப்பது என்பது சட்டப் பூர்வமானது மட்டுமல்ல, அது ஒரு சமூகப் பொறுப்புமிக்க செயலுமாகும்.



# அன்பளிப்புகள் மற்றும் பொழுதுபோக்கு பற்றிய விதிகளை அறிந்து கொள்ளுங்கள்

## பொருத்தமற்ற எதையும் நாம் கொடுப்பதுமில்லை வாங்குவதுமில்லை.

அன்பளிப்பு அல்லது பொழுதுபோக்கை அரிதாக வழங்குவது என்பது பெரும்பாலும் வர்த்தகத்தில் இயல்பானதாகக் கருதப்படும். ஆனால், சிலநேரங்களில் நல்ல நோக்கத்தோடு அளிக்கப்பட்ட அன்பளிப்பு அல்லது சலுகை தவறாகக்கூட போகலாம். ஒரு கடமை உணர்வை உருவாக்கும் அல்லது உங்களுடைய தொழில்முறை முடிவுகளை சமரசம் செய்யும் எந்தவொரு அன்பளிப்பும் எப்போதுமே தவறானதே.

இதன் காரணமாகவே, ஒரு அன்பளிப்பு எப்போது சரியாக இருக்கும் எப்போது சரியாக இருக்காது என்பதற்கான சூழல்களை அடையாளம் காண்பதற்கான வழிகாட்டு நெறிகளை நாம் கொண்டிருக்கிறோம். விதிகளை நீங்கள் பின்பற்றுவதை உறுதிசெய்யுங்கள். சிறப்புக் கட்டுப்பாடுகள் பற்றியும் தெரிந்திருங்கள். உதாரணமாக, ஒரு அரசு அதிகாரிக்குக் கொடுக்கப்படும் எந்தவொரு மதிப்புமிக்க பொருளும் பிரச்சினையாக மாறக்கூடும். நீங்கள் செய்ய வேண்டியதில் எது சரியானது என்பதில் தெளிவின்றி இருந்தால், எப்போதுமே சட்டத் துறையின் உதவியைக் கேளுங்கள்.

### *நல்லதே ஆற்றல்மிக்கது*



- எப்போதும் யோசித்து முடிவெடுங்கள்.
- நிறுவனத்தினால் ஏற்கத்தக்க மதிப்பு வரம்புக்குள் இருந்தாலும்கூட, ஒரு முடிவினை எடுப்பதில் ஆதிக்கம் செலுத்துவதற்காகக் கொடுக்கப்பட்டாலோ, அல்லது ஏதோ ஒரு தவறான தோற்றத்தைக் கொடுத்தாலோ அதை ஏற்க மறுத்துவிடுங்கள். இந்தச் சூழலை சட்டத் துறையிடம் தெரியப்படுத்துங்கள்.
- கொடுக்கப்பட்ட அல்லது பெறப்பட்ட அன்பளிப்பு அல்லது பொழுதுபோக்கானது:
  - மிகக் குறைந்த மதிப்புடையதாக இருக்க வேண்டும்.
  - அரிதாக நிகழ்வதாக இருக்க வேண்டும்.
  - ஒரு நியாயமான வர்த்தக நோக்கம் கொண்டதாக இருக்க வேண்டும்.
  - வர்த்தக மற்றும் புவியியல் இடத்தைப் பொறுத்து, ஏற்கத்தக்க வர்த்தக நடைமுறைகளுக்கு ஏற்ப நடந்து கொள்ளுங்கள்.
  - சட்டத்தாலும், கொடுப்பவர் மற்றும் வாங்குபவரின் கொள்கைகளால் அனுமதிக்கத் தக்கதாகவும் இருக்க வேண்டும்.
  - ஹெர்ஷேயை மோசமான அல்லது தர்மசங்கடமான நிலைக்கு ஆளாக்கக்கூடாது.
  - அது ஒருபோதும் ரொக்கமாகவோ, பரிசு அட்டையாகவோ, காசோலையாகவோ, கடனாகவோ அல்லது பங்காகவோ இருக்கக்கூடாது.
  - நமது கணக்கு ஏடுகளிலும் பதிவேடுகளிலும் துல்லியமாகப் பதிவு செய்யப்பட வேண்டும்.
- சட்டத் துறையிடமிருந்து முன் அனுமதி பெறாமல் ஒரு அரசு அதிகாரிக்கு மதிப்புமிக்க எதையும் கொடுக்காதீர்கள்.
- ஒரு அன்பளிப்பையோ, விருந்தையோ அல்லது பொழுதுபோக்கையோ யாரிடமும் ஒருபோதும் கேட்காதீர்கள். உங்களிடம் யாராவது கேட்டால், அதற்கு இணங்காதீர்கள்.

## இப்படி இருந்தால் என்ன செய்வது?

*நான் ஏற்கத்தகாத ஒரு அன்பளிப்பினை ஒரு வாடிக்கையாளரிடமிருந்து பெறுகிறேன். நான் என்ன செய்ய வேண்டும்?*

வாடிக்கையாளரிடம் அந்த அன்பளிப்பைத் திருப்பிக் கொடுத்துவிட்டு நமது கொள்கையை பணிவாக விளக்குங்கள். அந்த அன்பளிப்பு பூக்கள் அல்லது ஒரு உணவுக் கூடை போன்ற அழிந்துபோகக்கூடியது என்றால், திருப்பியளிப்பது உண்மையாகவே சாத்தியமற்றதாக இருந்தால், இடைவேளை எடுக்கும் அறையில் வைத்து எல்லாரும் அனுபவிக்க விட்டுவிடுங்கள்.

*நமது விற்பனையாளர்களில் ஒருவர் தான் செல்ல இயலாத ஒரு கச்சேரிக்கான ஒரு நுழைவுச் சீட்டை எனக்கு அளிக்கிறார். நான் வாங்கிக் கொள்ளலாமா?*

இல்லை. நுழைவுச்சீட்டுகளின் மதிப்பு நம் கொள்கையின் வரம்புக்குள் இருந்தாலும், அவர் உங்களுடன் அதில் கலந்து கொள்ளமாட்டார் என்பதால், அந்த விற்பனையாளரோடு அல்லது அவருடைய நிறுவனத்தோடு உங்கள் உறவை மேம்படுத்த ஒரு வாய்ப்பினை அது வழங்காது.

## நியாயமாக போட்டியிடுங்கள்

### நமது போட்டியாளர்களைவிட நியாயமாகவும் நேர்மையாகவும் நாம் சிறப்பாகச் செயல்படுகிறோம்.

நல்ல தயாரிப்புகளை சந்தைக்குக் கொண்டுவந்து, சுதந்திரமான, நியாயமான மற்றும் தடையற்ற போட்டியின் மூலம் அதன் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்படும் என்பதை மில்டன் ஹெர்ஷே நம்பினார். அவர் தனது பலமான மதிப்பீடுகளை ஒருபோதும் சமரசம் செய்து கொண்டதில்லை. இன்றும் நாம் அதே தத்துவத்திற்கு அர்ப்பணத்துடன் இருக்கிறோம். ஒரு போட்டிமிக்க உலகளாவிய சந்தையை ஊக்குவிக்கவும் பாதுகாக்கவும் ஏற்படுத்தப்பட்டுள்ள சட்டங்களால் வழிநடத்தப்படுகிறோம். நமது நல்ல விஷயங்களின் அடிப்படையில் நாம் வெற்றி பெறுகிறோம். தடையற்ற வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தும் எந்த நடத்தையையும் நாம் தவிர்க்கிறோம்.

நிறுவனத்தில் உங்கள் பணி அல்லது பொறுப்பின் அடிப்படையில் போட்டித் தகவல்பற்றி அறியவருவது இயல்பாக இருக்கலாம். ஆனால், அந்தத் தகவலை நன்னெறியோடும் சட்டப்பூர்வமாகவும் கருதுவதை உறுதி செய்யுங்கள். நியாயமாக, ஆனால் கடுமையாகப் போட்டியிடுங்கள். நமது போட்டியாளர்களைவிட முன்னேறும் நோக்கில் நியாயமற்ற முறையில், நம்பகமான செய்திகளை தவறாகப் பயன்படுத்தவோ, திரித்துக்கூறவோ அல்லது ஏமாற்றவோ செய்யாதீர்கள். வாடிக்கையாளர்களிடம் பேசும்போது, நமது தயாரிப்புகளின் தரம், சிறப்பியல்புகள் மற்றும் இருப்பு பற்றிய உண்மையான தகவல்களை மட்டுமே கொடுங்கள். நமது போட்டியாளர்கள் பற்றி இழிவான கருத்துக்களைத் தெரிவிக்காதீர்கள்.

### *நல்லதே ஆற்றல்மிக்கது*



- நாம் செயல்படும் நாட்டிலுள்ள நம்பிக்கைக்கு எதிரான சட்டம் மற்றும் போட்டிச் சட்டங்களைப் பின்பற்றுங்கள். நமது வாடிக்கையாளர்கள், சப்ளையர்கள் மற்றும் போட்டியாளர்களுடன் நியாயமான முறையில் நடந்து கொள்ளுங்கள். நமது தயாரிப்புகளின் தரம் மற்றும் தகுதியின் அடிப்படையில் போட்டியிடுங்கள்.
- நமது வர்த்தக யுத்திகள் மற்றும் திட்டங்கள் பற்றி போட்டியாளர்களிடம் பேசாதீர்கள்.
- போட்டியாளர், வாடிக்கையாளர், அல்லது சப்ளையரிடம் முறையாகவோ அல்லது இயல்பான விதத்திலோ கீழ்க்காண்பவற்றுக்காக எந்தவொரு ஒப்பந்தத்தையோ அல்லது உடன்படிக்கையையோ ஏற்படுத்திக் கொள்ளாதீர்கள்:
  - போட்டியாளரின் தயாரிப்பின் விலைகளுடன் இணைந்து நம் தயாரிப்புகளின் விலைகளை, உயர்த்த, அமைக்க அல்லது தக்கவைக்க ("பொறுத்து")
  - எல்லைகள், சந்தைகள் அல்லது வாடிக்கையாளர்களைப் பகிர்ந்துகொள்ளுதல்.
  - சந்தையில் மற்றொரு நிறுவனம் நுழைவதைத் தடுத்தல்.
  - ஒரு வாடிக்கையாளர் அல்லது சப்ளையருடன் வர்த்தகம் செய்ய மறுத்தல்.
  - ஏல செயல்முறையில் தலையிடுதல்.
  - உற்பத்தி, விற்பனை அல்லது வெளியீட்டைக் கட்டுப்படுத்துதல்.
  - வாங்குனர்கள் வாங்க விரும்பும் பொருளுடன் அவர்கள் விரும்பாத ஒரு பொருளை இணைத்து வாங்குமாறு வற்புறுத்துதல்.
- செய்தித்தாள் மற்றும் வர்த்தக இதழில் வரும் கட்டுரைகள் போன்ற பொது ஆதாரங்களிலிருந்து போட்டித் தகவல்களைப் பெற முயலுங்கள்.
- நமது விளம்பரம், விற்பனை மற்றும் பிரச்சார அம்சங்களில் நியாயமாகவும், உண்மையாகவும், முழுமையாகவும் இருங்கள்.

- மேலும் அறிய:

- நம்பிக்கையின்மை இணக்கத்துக்கான வழிகாட்டுதல்

## இப்படி இருந்தால் என்ன செய்வது?

*நமது போட்டியாளர்களுள் ஒருவரின் நிறுவனத்தில் வேலை செய்யும் என்னுடைய கல்லூரி நண்பரை ஒரு வர்த்தகக் கண்காட்சியில் பார்த்தேன். அவர் வர்த்தகம் எப்படிப் போகிறது எனக் கேட்டார். நான் என்ன செய்ய வேண்டும்?*

எதையும் குறிப்பாகக் குறிப்பிடாமல் எல்லாம் நன்றாகப் போகிறது என்று பொதுவாக பதிலளிப்பதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால், உங்களுடைய உரையாடலை உயர்ந்த ஒரு நிலையில் வைத்துக் கொள்ளுங்கள். ஒரு போட்டியாளரிடம் சாதாரணமாகப் பேசுவதும் தவறான தோற்றத்தைக் கொடுக்கலாம் என்பதை அறிந்திருங்கள்.

## நிறுவனத்தின் பொதுவானதல்லாத தகவல்களை கொண்டு வணிகம் செய்யாதீர்கள்

பொதுவானதல்லாத (அல்லது நிறுவனத்திற்குள்ளேயான) தகவல்களின் அடிப்படையில் வர்த்தகம் செய்வது என்பது நியாயமற்றது மட்டுமல்ல, அது சட்டத்திற்கு எதிரானதும் ஆகும் எனக் கருதுகிறோம்.

ஹெர்ஷேயின் தொழிலாளர்கள் மற்றும் இயக்குநர்கள் என்ற முறையில், நமது நிறுவனத்தை அல்லது நாம் தொடர்பு கொண்டிருக்கும் நிறுவனங்களைப் பற்றிய பொதுமக்களுக்குத் தெரியவராத தகவல் நமக்குத் தெரியவரலாம். ஆனால், பொதுமக்களுக்குத் தெரியவந்தால், அது சரக்கின் வாங்கல், விற்றல் மற்றும் தக்கவைப்பை பாதிக்கக்கூடியதாக இருக்கும். அந்தத் தகவல் நம்மை 'இன்சைடராக' - அதாவது 'உள்ளிருக்கும் நபராக' ஆக்குகிறது. அத்தகைய நிறுவனத்துக்குள்ளேயான தகவல்களைக் கொண்டு வணிகத்தில் ஈடுபடுவது சட்டத்திற்கு எதிரானது.

உட்புறத் தகவலாகக் கருதப்படும் தகவல்கள் எவை என்பதை அறிந்து கொள்ளுங்கள். நிறுவனங்களின் கையகப்படுத்தல்கள், விற்பனை அல்லது வருவாய் முடிவுகள், நிதி கணிப்புகள், நிர்வாக செயற்குழுவிலான மாற்றங்கள், நிலுவையில் உள்ள சட்டவழக்குகள், பெரும் வெற்றிகள் அல்லது இழப்புகள் பற்றிய தகவல்கள் பொதுவானதல்லாத தகவல்களுக்கான உதாரணங்களாகும்.

**நிறுவனத்துக்குள்ளேயான தகவலாகக் கருதப்படும் தகவல்கள் எவை என்பதை அறிந்து கொள்ளுங்கள்.**

### *நல்லதே ஆற்றல்மிக்கது*

- உட்புறத் தகவல்களைக்கொண்டு வர்த்தகம் செய்யாதீர்கள். (உங்கள் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நண்பர்கள் உட்பட) எந்தவொருவருக்கும் வர்த்தகத்தில் ஈடுபடுவது பற்றிய துப்புக்கொடுக்காதீர்கள். “துப்புக் கொடுப்பது (Tipping)” என்பதும் இன்சைடர் டிரேடிங் (உள்நபர் வர்த்தகச் சட்டம்) சட்டங்களின் மீறலாகும்.
- ஒரு தகவல் உட்புறத் தகவலா என்பது பற்றி உறுதியாகத் தெரியாவிட்டால், வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கு முன்னர் அதுபற்றி சட்டத் துறையிடம் கேளுங்கள். பொதுமக்களுக்கு அந்தத் தகவல் வெளியிடப்பட்டு விட்டதா என்பது பற்றி உறுதியாகத் தெரியாவிட்டால், அது வெளியிடப்படாததாகவே கருதுங்கள்.
- நீங்கள் ஒரு டிரேடிங் விண்டோ அல்லது சிறப்பு இருட்டடிப்புக் காலத்திற்கு உட்பட்டிருக்கிறீர்கள் என்று உங்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டால், அந்தக் கட்டுப்பாடு விலக்கப்படும்வரை ஹெர்ஷேயின் செக்யூரிட்டிகளில் வர்த்தகம் செய்யாதீர்கள்.
- மேலும் அறிய:
  - இன்சைடர் டிரேடிங் பாலிசி (உட்புற ஆள் வர்த்தகக் கொள்கை)

### இப்படி இருந்தால் என்ன செய்வது?

*நமது சப்ளையர்களோடு நடத்திய சந்திப்பின்போது, என்னுடைய மைத்துனர் வாங்க எண்ணிக்கொண்டிருக்கும் சில பங்குகளை பாதிக்கக்கூடிய தகவல்களை பற்றித் தெரிந்து கொண்டேன். அதனால் எனக்கு தனிப்பட்ட வகையில் ஆதாயமில்லை என்பதால், எனக்குத் தெரிந்த விஷயத்தை நான் பகிர்ந்துகொள்ளலாமா?*

இல்லை. உட்புறத் தகவல்களின் அடிப்படையில் நீங்கள் பங்குகள் வாங்குவதை அல்லது விற்பதை மட்டுமல்ல, உங்கள் மைத்துனர் (அல்லது வேறு யாருக்கும்) அதில் ஈடுபடுவதற்கான தகவல் அளிக்கப்படுவதையும் கூட சட்டம் தடுக்கிறது.

## துல்லியமான பதிவேடுகளை வைத்திருங்கள்

**நமது கணக்கு வைத்தலில் உள்ள நாணயமானது வாடிக்கையாளர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் வர்த்தகப் பங்குதாரர்களின் நம்பிக்கையை ஈர்க்கும் வகையில் உள்ளது.**

நமது நீண்டகால வெற்றி நமது வர்த்தகத்தை எவ்வளவு சிறப்பாக நிர்வகிக்கிறோம் என்பதைச் சார்ந்திருக்கிறது. நமது பதிவேடுகளும், கணக்கு வைத்தலும் நம் நிதிப் பொறுப்புகளை நிறைவேற்றவும், மக்களுக்கு உரியதைச் செலுத்தவும் உதவுகின்றன. நமது நிதி ஆரோக்கியத்தைப் பற்றிய ஒரு பிம்பத்தையும் அவை அளிக்கின்றன. அவை நமது பங்குதாரர்களுக்கும் முதலீட்டாளர்களுக்கும் நம்மை பொறுப்புள்ளவர்களாக ஆக்குகின்றன. அவற்றின் அடிப்படையிலேயே நாம் முக்கியமான உத்திசார் முடிவுகளை எடுக்கிறோம். எனவேதான், வர்த்தக பரிவர்த்தனைகளைத் தெளிவாகவும், முழுமையாகவும், துல்லியமாகவும் பிரதிபலிக்கும் பதிவேடுகள் நிறுவனத்தின் முக்கியமான சொத்துக்களாகக் கருதப்படுகிறது.

நமது நிறுவன கணக்கு ஏடுகள் மற்றும் பதிவேடுகளைப் பராமரிப்பதிலும் பதிவு செய்வதிலும் அனைத்து உள்ளகக் கட்டுப்பாடுகளையும் பின்பற்றுவதற்கு நாம் ஒவ்வொருவரும் கடமைப்பட்டிருக்கிறோம். வெளிப்படுத்தல் தேவைகளுக்கு இணங்குதல், நிதி அறிக்கையைத் தயாரித்தல் அல்லது ஒரு நேரத் தாளை நிரப்புதல் போன்ற எந்தப் பரிவர்த்தனையையும் நேர்மையாகவும் துல்லியமாகவும் முழுமையாகவும் செய்யுங்கள். ஏதாவது சந்தேகத்துக்குரிய நிதிப் பரிவர்த்தனைகள் பற்றி எச்சரிக்கையாக இருங்கள். உங்களுடைய வாடிக்கையாளர்களையும் பங்குதாரர்களையும் அறிந்து கொள்ளுங்கள். பண மோசடி போன்ற சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுக்க, நமது தயாரிப்புகளை அவர்கள் எப்படிப் பயன்படுத்துகிறார்கள் என்று புரிந்து கொள்ளுங்கள்.

நம்முடைய பதிவேடுகள் மேலாண்மையையும் (Records management), பதிவேடுகளைத் தக்கவைத்தல் சார்ந்த கொள்கைகளையும் அறிந்து பின்பற்ற வேண்டிய பொறுப்பும் உங்களுக்கு உள்ளது. நடப்பு அல்லது வழக்கு அச்சுறுத்தலுக்கு சாத்தியமான எந்தவொரு தகவலையும் குறிப்பான உத்தரவில்லாமல் ஒருபோதும் அழித்துவிடாதீர்கள்.



### நல்லதே ஆற்றல்மிக்கது



- எல்லாப் பரிவர்த்தனைகளையும் நமது பதிவேடுகள் துல்லியமாகவும் நியாயமாகவும் பிரதிபலிப்பதை உறுதி செய்ய நமது உள்ளக செயல்முறைகளையும் கட்டுப்பாடுகளையும் பின்பற்றுங்கள்.
- வெளிப்படுத்தப்படாமல், இரகசியமாக அல்லது பதிவு செய்யாமல் எந்தவொரு நிதிகளையும், சொத்துகளையும் உருவாக்காதீர்கள். நமது வணிகம் சார்ந்த தகவலை ஒருபோதும் திரித்துக் கூறாதீர்கள்.
- பதிவேடுகள் மேலாண்மைக் கொள்கைகளின்படி தகவல்களைப் பாதுகாத்து, வைத்திருந்து, நிர்வகித்து அழித்து விடுங்கள்.
- அரசு மற்றும் ஒழுங்குமுறை முகமைகளிடமிருந்து வரும் எல்லா நியாயமான தகவல் கோரிக்கைகளுக்கும் ஒத்துழையுங்கள். எந்த ஒரு அரசு தணிக்கை மற்றும் ஆய்வுகளுக்கும் முழுமையாக ஒத்துழைப்புக் கொடுங்கள்.
- மேலும் அறிய:

- பதிவேடுகள் தக்கவைப்புக் கொள்கை (Records Retention Policy)

## இப்படி இருந்தால் என்ன செய்வது?

*நான் நிதி அல்லது கணக்குத் துறையில் வேலை செய்யவில்லை. "நிதி நேர்மை" என்பது என்னுடைய பொறுப்பாகுமா?*

ஆம். கணக்கு வைத்தலில் துல்லியம் என்பது ஒரு குழு அல்லது ஒரு துறையின் வேலையில்லை. அது நம் அனைவருக்குமே உரிய பொறுப்பாகும். செலவு அறிக்கைகள் மற்றும் நலன் பதிவுப் படிவங்கள் முதல் பரிசோதனைத் தரவுகள் மற்றும் விற்பனை இன்வாய்ஸ்கள் வரை ஒவ்வொரு நாளும் நமது பரிவர்த்தனைகள் அனைத்துமே துல்லியமானதாகவும், முழுமையானதாகவும் சரியான முறையில் பதிவிடப்பட்டதாகவும் இருக்க வேண்டும்.

*ஒரு ஆய்வு அறிக்கையை உண்மையாகவே ஆய்வு செய்யாமல் அதில் ஒரு சகபணியாளர் கையொப்பமிடுவதை நான் பார்த்தேன். நான் என்ன செய்ய வேண்டும்?*

உங்கள் மேலாளரிடம், சட்டத் துறையிடம் அல்லது கன்செர்ன் லைனில் நீங்கள் பார்த்ததைத் தெரிவிக்க வேண்டும். உண்மையில், ஆய்வு செய்யாமல் அந்த அறிக்கையில் கையொப்பமிடுவது என்பது பதிவேடுகளை பொய்ப்பதிவு செய்யும் ஒன்றாகவே கருதப்படும். அது நமது நடத்தை விதியை அது மீறுவதாகும்.

# இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் வர்த்தக இணக்க விதிகளைப் பின்பற்றுங்கள்

## நமது தயாரிப்புகளின் உலகளாவிய வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தும் சட்டங்களுக்கு நாம் கட்டுப்படுகிறோம்.

அமெரிக்காவை அடிப்படையாகக் கொண்டு உலகம் முழுவதும் வர்த்தகம் செய்யும் நிறுவனம் என்ற முறையில், நமது தயாரிப்புகளின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதியை ஒழுங்குபடுத்தும் பன்னாட்டு வர்த்தகச் சட்டங்களை நாம் அறிந்து பின்பற்றுவது முக்கியம். பன்னாட்டு எல்லைகளைக் கடந்து தயாரிப்புகள், சேவைகள், தகவல் அல்லது தொழில்நுட்பத்தை அனுப்பும் பணிகளை நீங்கள் மேற்கொண்டிருந்தால், நீங்கள் வணிகம் செய்யும் நாடுகளுடன் தொடர்புடைய தேவைகளை அறிந்து கட்டுப்பட்டு நடப்பதை உறுதி செய்துகொள்ளுங்கள். ஒன்றுக்கு மேற்பட்ட நாட்டின் சட்டங்கள் பொருந்தும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

அமெரிக்க வர்த்தகத் தடையுள்ள நாடுகளில் அல்லது பொருளாதாரத் தடையுள்ள நாடுகளில் வர்த்தக வாய்ப்புகளை மிகக் கவனமாக நாம் மதிப்பிட வேண்டும். இந்தச் சந்தைகள் பற்றிய கண்டிப்பான ஒழுங்குமுறைகள் மதிப்பிடப்படுவதை உறுதி செய்ய முயற்சிக்க வேண்டும். அமெரிக்கா ஆதரவளிக்காத எந்தவொரு புறக்கணிப்பையும் நாம் ஊக்கப்படுத்துவதோ அல்லது பங்கேற்பதோ கிடையாது.




### *நல்லதே ஆற்றல்மிக்கது*



- இறக்குமதி அல்லது ஏற்றுமதி தயாரிப்புகளுக்கு பின்வருவனவற்றை உறுதி செய்யவும்:
  - உற்பத்தி நாடு, சென்றடையும் நாடு, இறுதிப் பயன்பாடு மற்றும் இறுதிப் பயனாளர் ஆகியவற்றின் அடிப்படையில் முன்னரே சரியான முறையில் வகைப்படுத்தப்படுதல்.
  - தேவையான ஆவணங்கள், லேபிளிங், உரிமம், அனுமதிகள் மற்றும் ஒப்புதல்கள் அனைத்தையும் உள்ளடக்கும்.
- நமது வழங்கல் சங்கிலியின் நேர்மையை உறுதி செய்தல்—நம் சார்பாக வணிகத்தில் ஈடுபடும் மற்றவர்களுக்கு நமது கொள்கைகளைத் தெரியப்படுத்துதல்.
- ஒரு புறக்கணிப்பில் பங்கேற்கும்படி நீங்கள் வேண்டிக்கொள்ளப்பட்டால், அல்லது ஒரு புறக்கணிப்பில் நமது நிறுவனத்தின் நிலையைப் பற்றிக் கேட்டால், உடனடியாக சட்டத் துறையைத் தொடர்பு கொள்ளுதல். (நமது வர்த்தகப் பங்குதாரர்களுள் ஒருவர் ஒரு புறக்கணிப்பில் பங்கேற்பது பற்றி உங்களுக்குத் தெரியவந்தால், சட்டத் துறையை அணுகுவதும் சம அளவில் முக்கியமானதே. அமெரிக்கா மற்றும் அவர்கள் வேலை செய்யும் நாடுகளின் சட்டங்களுக்கு கட்டுப்பட்டு இருக்க வேண்டும் என எதிர்பார்க்கிறோம்.)
- சட்டங்கள், சுங்கம் அல்லது உள்ளூர் நடைமுறைகளுக்கிடையே ஒரு முரண்பாடு இருப்பதாகத் தோன்றினால், சட்டத் துறையின் உதவியையோ அல்லது நமது உலகளாவிய வர்த்தகம் மற்றும் சுங்க இணக்கத் துறையின் உறுப்பினரையோ அணுகி அவர்களின் உதவியைப் பெறுங்கள்.

- மேலும் அறிய:

- வர்த்தக இணக்கக் கையேடு

# நமது நிறுவனத்தை நாம் பாதுகாக்கிறோம்

நமது சொத்துக்களைப் பாதுகாக்கவும்

நோக்க மோதல்களைத் தவிர்க்கவும்

நமது நிறுவனத்தின் சார்பாகப் பேசாதீர்கள்

## நமது சொத்துக்களைப் பாதுகாக்கவும்

### நாம் நமது இயற்பியல், மின்னணுவியல் மற்றும் தகவல் சொத்துக்களின் நல்ல பொறுப்பாளர்களாவோம்.

வர்த்தகத்தை நடத்துவதற்கு நமது நிறுவனம் உரிமையாகக் கொண்டுள்ள அல்லது பயன்படுத்தும் அனைத்துமே நமது சொத்துக்களுள் அடங்கும். இந்தச் சொத்துக்களைப் பராமரிக்கும் பொறுப்பை நாம் ஒவ்வொருவரும் பெற்றுள்ளோம். எனவே, அவற்றின் இழப்பு, சேதம், திருட்டு, கழிவு மற்றும் முறையற்ற பயன்பாட்டிலிருந்து பாதுகாக்க செயலூக்கத்தோடு இருக்க வேண்டும்.

ஃபர்னிச்சர்கள், உபகரணங்கள், கருவிகள், சரக்கு, கணினி வன்பொருள் மற்றும் மென்பொருள் போன்ற பொருட்களும் மின்னணு சாதனங்களும் நீங்கள் வேலை செய்வதற்காக உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. தொலைபேசிகள், கணினிகள், மின்னஞ்சல் மற்றும் இணையம் போன்ற சொத்துக்களை அரிதாக தனிப்பட்ட பயன்பாட்டுக்குப் பயன்படுத்த அனுமதிக்கப்படுகிறது. ஆனால், அத்தகைய பயன்பாடுகள் உங்களுடைய வேலைக்கு (அல்லது மற்ற யாருடைய வேலைக்கும்) இடையூறாக இல்லாதிருப்பதையும் நமது கொள்கைகளை அல்லது சட்டத்தை மீறாதிருப்பதையும் உறுதி செய்யுங்கள்.

நமது கணினிகளில் நீங்கள் எழுதும், அனுப்பும், பதிவிறக்கம் செய்யும் அல்லது சேமிக்கும் எதுவுமே நிறுவனத்தின் சொத்து என்பதை அறிந்திருங்கள். உங்கள் பயன்பாட்டை நாங்கள் கண்காணிக்கலாம். நமது கணினிகளைப் பயன்படுத்தும்போது தனிப்பட்ட அந்தரங்கம் எதையும் நீங்கள் எதிர்பார்க்கலாகாது.

தகவல் என்பதும் ஒரு முக்கியமான சொத்து. இரகசியத் தகவல் மற்றும் அறிவுசார் சொத்து என்பது நிறுவனத்தின் குறிப்பிடத்தக்க முதலீடு மற்றும் பல ஆண்டு கடின உழைப்பின் விளைவாகும். வர்த்தக இரகசியங்கள், காப்புரிமைகள், பதிப்புரிமைகள், வர்த்தகக் குறிகள், வணிகத் திட்டங்கள், பொறியியல் யோசனைகள், தரவுதளங்கள், வாடிக்கையாளர் பட்டியல்கள் போன்ற இந்த சொத்துகளைப் பாதுகாக்க நீங்கள் உதவும்போது, நமது போட்டிசார் சாதகத்தைப் பாதுகாக்க நீங்கள் உதவுகிறீர்கள்.

## நல்லதே ஆற்றல்மிக்கது



- நமது சொத்தைப் பாதுகாக்கவும்:
  - சேதமடைகின்ற, பாதுகாப்பற்ற அல்லது பழுதுநீக்கம் செய்யப்பட வேண்டிய எந்தவொரு பொருள் பற்றியும் தெரிவியுங்கள்.
  - உங்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டலன்றி எதையும் கடன்கொடுக்கவோ, விற்கவோ அல்லது கொடுக்கவோ செய்யாதீர்கள்.
- நமது கணினிகளைப் பாதுகாக்கவும்:
  - உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள கணினி வன்பொருளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள். உங்களுடைய கடவுச்சொல்லை (கடவுச்சொற்களை) பாதுகாப்பாக வைத்திருங்கள்.
  - உரிமம் பெறாத மென்பொருள், அப்ளிகேஷன்கள், வன்பொருள் அல்லது சேமிப்பகக் கருவிகளை உங்கள் கணினியில் நிறுவவேண்டாம். உரிமம் பெறாத அப்ளிக்கேஷன்கள் அல்லது கருவிகள் வழியாக நமது நெட்வொர்க்கை அணுகாதீர்கள்.
  - உரிமம் பெறாத மென்பொருளை பயன்படுத்தாதீர்கள் அல்லது வீட்டில் பயன்படுத்துவதற்காகவோ அல்லது மற்றவர்கள் பயன்படுத்துவதற்காகவோ மென்பொருட்களை நகலெடுக்காதீர்கள்.
  - மிகவும் முக்கியமான தனிப்பட்ட அல்லது பெருநிறுவனத் தகவலை வெளிக்கொணர எடுக்கும் பிஷ்ஷிங் மோசடிகள் அல்லது பிற முயற்சிகள் பற்றி எச்சரிக்கையுடன் இருங்கள்.
  - மின்னஞ்சல்களின் மூலத்தை நீங்கள் தெரிந்திருந்தால்கூட, சந்தேகத்துக்குரிய இணைப்புகளைத் திறக்காதீர்கள்.
- நமது தகவலைப் பாதுகாக்கவும்
  - ஒரு சட்டப்பூர்வமான வணிகக் காரணம் இருக்கும்போது மட்டுமே இரகசியத் தகவல்களைப் பகிருங்கள். ஹெர்ஷேக்கு வெளியில் உள்ள ஒரு நபரோடு நீங்கள் பகிர்ந்தால், முன்னரே வெளிப்படுத்தாமை ஒப்பந்தத்தில் ஒப்புதலைப் பெறுங்கள்.
  - ஹெர்ஷேயில் உங்கள் பணிக்காலம் முடிவடைந்துவிட்டாலும் கூட ஹெர்ஷேயின் இரகசியத் தகவலை பாதுகாக்கவும்.
- மற்றவர்களின் தகவல்களைப் பாதுகாக்கவும். நமது நிறுவனத்தைப் பற்றிய இரகசியத் தகவல்களை மட்டுமல்ல, நாம் வர்த்தகம் செய்யும் மற்ற நிறுவனங்களின் இரகசியத் தகவல்களையும் பாதுகாக்கும் பொறுப்பு நமக்கு உள்ளது.

- மேலும் அறிய:

- தணிக்கை மற்றும் கண்காணிப்புக் கொள்கை



## நோக்க மோதல்களைத் தவிர்க்கவும்

தனிப்பட்ட நமது நலன்கள் ஹெர்ஷேயின் சார்பாக நாம் எடுக்கும் வர்த்தக முடிவுகளைப் பாதிக்க நாம் அனுமதிப்பதில்லை.

வேலை செய்யும் இடத்திற்கு வேளியே நீங்கள் செய்யும் ஏதோ ஒன்று வேலை செய்யும் இடத்தில் உள்ள வேலையைப் பாதிக்கும்போது கருத்து முரண்பாடு ஏற்படலாம். ஒரு மோதலை முன்வைக்கக்கூடிய எல்லா சூழல்களையும் பட்டியலிடுவதற்கு சாத்தியமில்லை. ஆனால், உண்மையாகவே கருத்து முரண்பாடு ஏற்படக்கூடிய சில குறிப்பிட்ட சூழல்கள் உள்ளன. ஏற்பட சாத்தியமுள்ள ஒரு முரணைக் கண்டறிய முடிவது, அப்படிப்பட்ட முரணைத் தவிர்க்க உங்களுக்கு உதவலாம்.

ஹெர்ஷே சார்பாக முடிவெடுக்கும்போது, நமது நிறுவனத்தின் சிறந்த வர்த்தக நலன்களுக்கு ஏற்பவும், ஒரு முரண்பாட்டுக்கான தோற்றத்தைக்கூடத் தவிர்க்கும் வகையில் நடக்க வேண்டிய கடமை உங்களுக்கு உள்ளது. உங்களுடைய நடுநிலையை அல்லது நடுநிலையான வர்த்தக முடிவுகளை எடுக்கும் உங்கள் திறனை சமரசம் செய்யக்கூடிய அல்லது சமரசம் செய்வது போன்று தோற்றமளிக்கக்கூடிய தனிப்பட்ட நடவடிக்கைகள், முதலீடு, ஆர்வம் அல்லது தொடர்பு இருப்பதை நீங்கள் கண்டறிந்தால், உங்கள் மேலாளரிடமோ, மனிதவள அதிகாரியிடமோ அல்லது சட்டத் துறையிடமோ உடனடியாகத் தெரிவியுங்கள். முரண்பாடுகளை உடனடியாக வெளிப்படுத்தி சரியான முறையில் நிர்வகித்தால், பல முரண்பாடுகளை எளிதாகத் தவிர்க்க முடியும் அல்லது தீர்க்க முடியும்.


### இப்படி இருந்தால் என்ன செய்வது?



*மற்றொரு நிறுவனத்தின் செயற்குழுவில் அமர வேண்டும் என்று என்னை அணுகினார்கள். இந்தப் பதவியை ஏற்பதற்கு முன்னர் நிறுவனத்தில் யாரிடமிருந்தாவது அனுமதி கேட்கவேண்டுமா?*

ஆம். உங்கள் மேலாளரிடமும் சட்டத் துறையிடமும் தெரிவித்து அந்தச் சூழலை மறுஆய்வு செய்யுங்கள். அந்தப் பதவியை நீங்கள் ஏற்க வேண்டுமா என்பதற்கு வழிகாட்டுதல்களைப் பெறுங்கள். சில சமயங்களில் மற்ற நிறுவனத்தின் செயற்குழுவில் பங்கேற்பது ஒரு முரணாக அமையலாம்—நிறுவனத்தின் வகை, அது அளிக்கும் சேவைகள் மற்றும் ஹெர்ஷேயில் உங்கள் பொறுப்புகளின் மீது எந்த விதமான தாக்கத்தை அது ஏற்படுத்தும் என்பதையெல்லாம் நாம் பார்க்க வேண்டும்.

### *நல்லதே ஆற்றல்மிக்கது*



- சாத்தியமான முரணைக் காணும்போது அதை அறிந்து கொள்ளுங்கள். கீழ்க்காணும் சூழலில் முரண்பாடு ஏற்படலாம்:
  - ஒரு நெருக்கமாக உறவு கொண்டிருக்கும் நபருடன் வர்த்தகம் செய்தல் அல்லது அவரை மேற்பார்வை செய்தல்.
  - நமது சப்ளையர்கள், வாடிக்கையாளர்கள், வர்த்தகப் பங்குதாரர்கள் அல்லது போட்டியாளர்களில் ஒருவரிடம் நீங்கள் முதலீடு செய்தல்.
  - ஹெர்ஷேக்குப் போட்டியான, அல்லது அதனுடன் வர்த்தகம் செய்யும் அல்லது செய்ய விரும்பும் ஒரு நிறுவனத்தை நீங்கள் நடத்துதல், அல்லது அதில் வேலை செய்தல். அத்தகைய ஒரு நிறுவனத்தின் ஆலோசனைப் பணியை அல்லது இயக்குனர் குழுவில் இருக்கும் பட்சத்தில் அதுவும் ஒரு முரண்பாட்டை எழுப்பலாம்.
  - ஒரு அறப்பணியை மேற்கொள்கின்ற, நிபுணத்துவ அல்லது சமூக நிறுவனத்திற்கு உதவுவதற்காக, அனுமதியில்லாமல் ஹெர்ஷேயின் பெயரை அல்லது அதன் பொருளை அல்லது தகவலை நீங்கள் பயன்படுத்துதல்.
  - ஹெர்ஷேக்கான தொழில் வாய்ப்பினை உங்களுக்காக எடுத்துக் கொள்ளுதல்.
- சாத்தியமான கருத்து முரண்பாட்டுச் சூழல்கள் அனைத்தையும் பட்டியலிடுவதற்கு வாய்ப்பில்லை என்பதை மனதில் கொள்ளுங்கள்; ஒரு சூழல் முரண்பாடுடையதா என்பது பற்றி உறுதியாகத் தெரியாவிட்டால், சட்டத் துறையிடம் கேளுங்கள்.
- எந்தவொரு உண்மையான அல்லது சாத்தியமான கருத்து முரண்பாட்டையோ அல்லது கருத்து முரண்பாடு போன்று தோன்றும் சூழலையோ கூட உங்கள் மேலாளரிடமும் சட்டத் துறையிடமும் தெரிவிக்கலாம்.

- மேலும் அறிய:

- வட்டி கொள்கையின் உலகளாவிய மோதல்(Global Conflict of Interest Policy)

## நமது நிறுவனத்தின் சார்பாகப் பேசாதீர்கள்

நமது நிறுவனத்தைப் பற்றித் தெரிவிக்கும் தகவல்கள் ஒரே விதமாகவும், துல்லியமாகவும், முழுமையாகவும் இருப்பதை நாம் உறுதி செய்கிறோம்.

வார்த்தைகளின் சக்தியை நீங்கள் நினைத்துப் பார்க்கும்போதும், வார்த்தைகளைப் பயன்படுத்தும் பல்வேறு வழிகளையும், நமது நிறுவனம் போன்ற நம்பிக்கையான நிறுவனத்தின் மீது அந்த வார்த்தைகள் ஏற்படுத்தும் தாக்கத்தையும் பார்க்கும்போதும், ஒரு தெளிவான செய்தியை அனுப்புவதன் மதிப்பை நீங்கள் புரிந்து கொள்வீர்கள்.

பொதுமக்களுக்கும், ஒழுங்குமுறை அதிகாரிகளுக்கும், மற்றவர்களுக்கும் துல்லியமான மற்றும் முழுமையான தகவல் அளிக்கப்படுவதை உறுதி செய்வதற்கு, அதிகாரப்பூர்வ நிறுவன செய்தித் தொடர்பாளர்களாக நாம் சிலரை நியமித்துள்ளோம். உங்களுக்கு அத்தகைய அதிகாரம் அளிக்கப்படாவிட்டால், ஹெர்ஷேயின் சார்பாக நீங்கள் எந்தவொரு கருத்தையும் பொதுவாக கொடுக்காதீர்கள்.

### *நல்லதே ஆற்றல்மிக்கது*

- நிதி சார்ந்த தகவல்களுக்கான எல்லா கோரிக்கைகளையும் [முதலீட்டாளர் உறவுகள் துறைக்கு (Investor Relations Department) அனுப்புங்கள்](#).
- தகவல்களைக் கேட்டுவரும் எல்லா ஊடக விசாரணைகளையும் பொதுக் கோரிக்கைகளையும் பெருநிறுவன தகவல்தொடர்புத் துறையிடம் (Corporate Communications Department) தெரிவியுங்கள்.
- அரசு மற்றும் ஒழுங்குமுறை முகமைகளிடமிருந்து வரும் எல்லா பொது தகவல் கோரிக்கைகளையும் விசாரணைகளையும் சட்டத்துறைக்கு அனுப்புங்கள்.
- சமூக ஊடகங்களைப் பயன்படுத்தும்போது:
  - நமது நிறுவனத்தைப் பற்றி நீங்கள் தெரிவிக்கும் எந்தவொரு கருத்தும் உங்களுடைய கருத்துதான் என்றும் அது நமது நிறுவனத்தின் கருத்தைப் பிரதிபலிக்காது என்பதையும் தெளிவாகக் கூறுங்கள்.
  - நமது நிறுவனத்தைப் பற்றிய அல்லது நமது வாடிக்கையாளர்கள், வர்த்தகப் பங்குதாரர்கள் அல்லது சப்ளையர்கள் பற்றிய இரகசியத் தொழில் தகவல்களை வெளிப்படுத்தாதீர்கள்.
  - இரகசிய வர்த்தகத் தகவல்கள், பாரபட்சமான அல்லது அச்சுறுத்தல் ஏற்படுத்தக்கூடிய தகவல், மிரட்டல், துன்புறுத்துதல் அல்லது அடாவடித்தனமான எந்தவொரு தகவலையும் பதிவேற்றம் செய்யாதீர்கள்.

## இப்படி இருந்தால் என்ன செய்வது?

*நிறுவன கையகப்படுத்தல் பற்றிய வதந்தி பற்றி ஒரு ஊடகம் என்னைத் தொடர்பு கொண்டது. அந்த பரிவர்த்தனை பற்றி நான் அலுவலகத்தில் நடந்த உரையாடலைக் கேட்டிருக்கிறேன். நான் கேட்ட விஷயத்தை வெளியில் பேசுவதால் நமது நிறுவனத்தின் பங்கு விலை அதிகரிக்கலாம். நான் அறிந்ததைப் பற்றி அந்த செய்தியாளரிடம் சொல்வது நல்ல யோசனையா?*

இல்லை. ஹெர்ஷேயின் அதிகாரப்பூர்வ செய்தித் தொடர்பாளராக இருந்தாலன்றி, அந்த வதந்தி பற்றி கருத்துத் தெரிவிக்காதீர்கள். உங்களிடம் உள்ள தகவல் தவறாகவோ அல்லது முழுமையற்றதாகவோ இருக்கலாம். அல்லது நிறுவனத்துக்குள்ளேயான தகவலாகவும் இருக்கலாம். அதை நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ செய்தித் தொடர்பாளர் சிறப்பாகக் கூறுவார்.

*நமது நிறுவத்துக்கு நெருக்கடி ஏற்படுத்தக்கூடிய வகையிலான ஒரு வலைப்பதிவு இடுகையைப் பார்த்தேன். அதில் நமது தயாரிப்புகளுள் ஒன்றைப்பற்றி துல்லியமற்ற தகவல் இருந்தது. அந்தத் தயாரிப்பு பற்றிய உண்மைகளை நான் அறிவேன். அந்தப் பதிவை நேரடியாகச் சரிசெய்ய விரும்புகிறேன்—ஆன்லைனில் ஒரு பதிலை நான் பதிவு செய்வது சரியா?*

இல்லை. நீங்கள் ஒரு அதிகாரப்பூர்வ செய்தித் தொடர்பாளராக இல்லாதபட்சத்தில், பெருநிறுவன தகவல்தொடர்பிடம் தெரிவித்து அதிகாரப்பூர்வ செய்தித் தொடர்பாளர் அந்தச் சூழலைச் சரிசெய்ய அனுமதிக்க வேண்டும்.

# நாம் நல்ல உலகளாவிய குடிமக்களாக இருக்கிறோம்

நல்ல பணியாளராக இருங்கள்

நல்லதைப் பகிருங்கள் மாற்றத்தை உருவாக்கிடுங்கள்

## நல்ல பணியாளராக இருங்கள்

**நம் உலகம் எதிர்கொள்ளும் சவால்களில், அதன் தீர்வுகளில் நாமும் ஓர் அங்கமாக உள்ளோம் என்பதை நாம் அறிகிறோம்.**

சுற்றுச்சூழலுக்கு பொறுப்பான முறையில் நாம் நம் வர்த்தகத்தை நடத்த முயற்சிக்கிறோம். அனைத்து பொருத்தமான சுற்றுச்சூழல் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்க உறுதிபூண்டுள்ளோம். நமது தொழிற்சாலைகளில் கிரீன் ஹவுஸ் வாயுவின் வெளியேற்றங்களைக் கட்டுப்படுத்துவது, கழிவைக் குறைப்பது மற்றும் தண்ணீர் மற்றும் ஆற்றல் பயன்பாட்டைக் குறைப்பது ஆகியவற்றின் மூலம் நமது சுற்றுச்சூழல் மாசுபாடுகளைக் குறைக்க பேரார்வமிக்க இலக்குகளை நாம் வைத்திருக்கிறோம். நமது பகிரப்பட்ட நன்மை சட்டகம் மேலும் முன்னேறவும், நீடிப்புக்கான சவால்களை வெற்றிகொள்ள உதவும் யுத்திகளை உருவாக்கவும், நமது உட்பொருட்களின் ஆதாரமாக உள்ள விவசாய சமூகங்களை பேணவும் நமக்கு உதவுகிறது.

## நல்லதே ஆற்றல்மிக்கது

- கீழ்க்காணும் நோக்கத்தில் உள்ள அனைத்து சட்டங்கள், கொள்கைகள், அனுமதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கும் கட்டுப்பட்டு இருங்கள்:
  - சுற்றுப்புற சூழலைப் பாதுகாப்பது.
  - ஆற்றல், நீர் மற்றும் இயற்கை வளங்களை சேமித்துக் காப்பது.
  - உலகம் முழுவதும் நமது செயல்பாடுகளினால் ஏற்படும் சுற்றுச்சூழல் தாக்கத்தைக் குறைப்பது.
- நமது பெருநிறுவன சமூகப் பொறுப்பு முன்முயற்சிகள் பற்றி அதிகமாகத் தெரிந்து கொள்ளுங்கள். அவற்றை மேலும் முன்னெடுத்துச் செல்வதில் நீங்கள் என்ன செய்யலாம் என்றும் தெரிந்து கொள்ளுங்கள்.
- மேலும் அறிய:

- சுற்றுப்புறசூழல் பேண்தகைமை தளம்

## ஒரு பகிரப்படும் வாக்குறுதி

நாங்கள் மேம்படுத்துவதற்கான வழிகளை தொடர்ந்து தேடிக்கொண்டே இருக்கிறோம். அதிகத் திறம்பட வேலை செய்வதற்கும், சுற்றுச்சூழல் மாசுபாடுகளைக் குறைப்பதற்கும் இலக்குகளை வைத்திருக்கிறோம். மறுசுழற்சி, கழிவைக் குறைப்பது, நீர் பயன்பாடு மற்றும் பசுமை வாயுக்களின் வெளியேற்றம், நீடித்த பேக்கேஜிங்—இவை அனைத்துமே நிலத்தைப் பராமரிப்பதற்கானவை. அவை நம்மைப் பாதுகாக்கின்றன, விலைமதிப்பில்லாத வளங்களையும் சேமித்துப் பாதுகாக்கின்றன. மேலும் அறிந்துகொள்ள விரும்புகிறீர்களா? நமது சமீபத்திய பெருநிறுவன சமூகப் பொறுப்பு (Corporate Social Responsibility) அறிக்கையைப் பாருங்கள்.



# நல்லதைப் பகிருங்கள் மாற்றத்தை உருவாக்கிடுங்கள்

## ஒருங்கிணைந்து நல்ல விஷயங்களைச் செய்கிறோம்.


குழந்தைகள் மற்றும் சமூகங்களில் முதலீடு செய்யும் மில்டன் ஹெர்ஷேயின் நோக்கம் இன்னும் செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒரு நிறுவனம் என்ற முறையில், சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டை ஊக்குவிக்க கூட்டாண்மைகளில் உறுதியாக உள்ளோம். நாம் எங்கு வாழ்கிறோமோ எங்கு வேலை செய்கிறோமோ அந்த இடங்களில் உள்ள நமது மக்களுக்கும் சுற்றத்தினருக்கும் பலனளிக்கும் முன் முயற்சிகளைச் செய்வதில் அதிக ஆர்வமாக இருக்கிறோம். நரிஷிங் மைண்ட்ஸ் (Nourishing Minds) மற்றும் குட் டு கிவ் பேக் வீக் (Good to Give Back Week) போன்ற நமது பகிரப்படும் சமூக நோக்கங்களில் பங்கேற்க உங்களை ஊக்குவிக்கிறோம். பெருநிறுவன அளவில் நமது ஏழைகளுக்கு உதவும் கூட்டாண்மை மற்றும் தொழிலாளர் ஈடுபாட்டுத் திட்டங்கள் வழியாக ஹெர்ஷே ஆதரிக்கும் பல முன் முயற்சிகளில் ஏதாவது ஒன்றிலோ அல்லது பலவற்றிலோ பங்கேற்கவும் ஊக்குவிக்கிறோம்.

தனிப்பட்ட அளவிலும் மாற்றத்தை ஏற்படுத்த தொழிலாளர்களை ஊக்குவிக்கிறோம். அறச்செயல்கள் மற்றும் அரசியல் நடவடிக்கைகளில் ஒரு தன்னார்வலராக உங்களுடைய ஈடுபாட்டை நாம் ஆதரிக்கிறோம். ஆனால், பொதுவாக, அவற்றை உங்களுடைய தனிப்பட்ட நேரத்திலும், சொந்தச் செலவிலும் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம். மேலும் அவை சட்டப்படியும், நமது கொள்கைகளுக்கு ஏற்பவும் இருப்பதை உறுதி செய்துகொள்ளவும் கேட்டுக் கொள்கிறோம். முன்னரே அனுமதி பெற்றாலன்றி, உங்களுடைய தனிப்பட்ட தன்னார்வ செயல்பாடுகளை ஊக்குவிப்பதற்காக நிறுவனத்தின் நிதியை பயன்படுத்தவோ கொடையளிக்கவோ செய்யாதீர்கள்.

தங்கள் சமூகங்களில் செய்யும் நல்ல செயல்களில் பங்கெடுக்கும் தனிப்பட்ட முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்காக மேட்சிங் கிப்ட்ஸ் (Matching Gifts), டாலர்ஸ் ஃபார் டூயர்ஸ் (Dollars for Doers) மற்றும் பெய்ட் வாலண்டியர் டைம் டு சப்போர்ட் எம்ப்ளாயீஸ் (paid volunteer time to support employees') போன்ற நலதிட்டங்களையும் நிறுவன அளவிலான திட்டங்களையும் நாம் அளிக்கிறோம். இந்தத் திட்டங்கள் மற்றும் கொள்கைகள் பற்றிய அதிகத் தகவல்களை csr.hersheys.com-ல் பார்க்கலாம்.

ஹெர்ஷே எந்த அரசியல் கட்சிக்கும் பங்களிப்புகளை செய்வதில்லை. ஹெர்ஷே அரசியல் நடவடிக்கைக் குழுவின் (Hershey Political Action Committee (PAC)) வழியாக பெருநிறுவன அரசியல் நடவடிக்கைகளில் மட்டுமே ஈடுபடுகிறது. கூட்டாட்சி, மாகாண அல்லது உள்ளூர் வேட்பாளர்களுக்கு நீங்கள் அளிக்கும் எந்த பங்களிப்புகளுக்கும் நாம் பணம் கொடுக்க மாட்டோம்.

### நல்லதே ஆற்றல்மிக்கது



- உங்களுக்கான மிகவும் அர்த்தமுள்ள வழியில் அல்லது வழிகளில் திருப்பியளிப்பதன் மூலம் மில்டன் ஹெர்ஷே பாரம்பரியத்தைக் கட்டியெழுப்புங்கள்.
- குட் டு கிவ் பேக் வீக் (Good to Give Back Week) போன்ற ஹெர்ஷேயினால் ஆதரிக்கப்படும் தொழிலாளர் ஈடுபாடு மற்றும் ஏழைகளுக்கு உதவும் முயற்சிகளில் பங்கேற்பளியுங்கள்.
- மேட்சிங் கிப்ட்ஸ் (Matching Gifts) மற்றும் டாலர்ஸ் ஃபார் டூயர்ஸ் (Dollars for Doers) போன்ற திட்டங்களைப் பயன்படுத்தி தனிப்பட்ட முறையிலான அறப்பணிகள் மற்றும் தன்னார்வத் தொண்டுகளை அதகரித்துக்கொள்ளுங்கள்.

- மேலும் அறிய:

- CSR இணையதளம்

### ஒரு பகிரப்படும் வாக்குறுதி

நல்ல சுற்றத்தினராக இருப்பது மட்டும் போதாது. நாம் நல்ல பங்களிப்பாளராகவும் இருக்க விரும்புகிறோம். நாம் சமூகங்களில் வாழ்கிறோம் என்பதற்காக அந்தச் சமூகங்கள் சிறப்பாகச் செயல்பட வேண்டும் என விரும்புகிறோம். Nourishing 1 Million Minds by 2020 என்ற இலக்கிலிருந்து, Good to Give Back Week வரை, Stop Hunger Now போன்ற இலாபமற்ற நிறுவனத்துக்கு தன்னார்வத் தொண்டுசெய்து, நமது வருடாந்திர United Way campaign வழியாக நிதி பெறுவதுவரை, மில்டன் ஹெர்ஷே பள்ளியில் திட்ட உதவித்தொகையை வழிநடத்துவது வரை, நாம் நமது மிகச் சிறந்ததைத் திருப்பிக் கொடுக்கிறோம். இன்னும் அறிந்துகொள்ள விரும்புகிறீர்களா? நமது சமீபத்திய பெருநிறுவன சமூகப் பொறுப்பு (Corporate Social Responsibility) அறிக்கையைப் பாருங்கள்.

### இப்படி இருந்தால் என்ன செய்வது?

ஒரு உள்ளூர் தொண்டு நிறுவனத்தின் நிர்வாகக் குழுவில் என்னுடைய நண்பர் உள்ளார். அடுத்து வரவிருக்கும் கொண்டாட்டத்திற்கு தயாரிப்புகளையோ அல்லது பணமோ ஹெர்ஷே அளிக்க முடியுமா எனக் கேட்டார். அதைச் செய்வதற்கு நான் உறுதி கூறலாமா?

இல்லை. இப்படிப்பட்ட கோரிக்கைகளை நீங்கள் பெற்றால், ஹெர்ஷேயின் CSR குழுவின் உறுப்பினரைத் தொடர்பு கொண்டு நமது கார்பொரேட் கிவ்விங் மற்றும் புராடக்ட் டொனேஷன் பற்றி மேலும் தெரிந்துகொள்ளும்படி அந்த நபரிடம் கூறுங்கள்.

# நமது நேர்மையில் நம்பிக்கை கொள்ளுதல்

ஹெர்ஷே கதையின் அடுத்த அத்தியாயம்? அது நம் ஒவ்வொருவரையும் பொறுத்தது.

'நல்ல நிறுவனத்தில்' இருப்பது பற்றிப் பேசும்போது, நமது இயக்கக் கோட்பாடுகளை உறுதியாகப் பின்பற்றுவதற்காக நமது சகபணியாளர்களோடும் வர்த்தகப் பங்குதாரர்களோடும் இணைந்து உழைப்பதையும் உயர்தரமான நேர்மைக்கு பரஸ்பரம் ஒருவர் ஒருவரை பொறுப்பாக்குவதையும் குறிப்பிடுகிறோம். இது வர்த்தகத்தையும் நம்பிக்கையையும் மட்டுமின்றி, வர்த்தகத் தொடர்புகளில் ஈடுபடுவதையும், அறநெறி அடித்தளத்தைக் கட்டியெழுப்புவதையும் பற்றியது. எல்லா இடங்களிலும் உள்ள மக்களுக்கு நல்லதைக் கொண்டு வர உங்களால் முடிந்த அனைத்தையும் செய்யுங்கள்.

நமது நடத்தை விதிகள் அல்லது நமது கொள்கைகள் பற்றி ஏதாவது கேள்விகள் இருந்தால், சட்டத் துறையின் ஒரு உறுப்பினரையோ, நிர்வாகத்தையோ அல்லது கன்செர்ன் லைனையோ தயவுசெய்து தொடர்பு கொள்ளுங்கள்.

நமது நடத்தை விதிகளில் செயல் அதிகாரிகள் அல்லது இயக்குநர்களுக்கு அளிக்கப்படும் எந்தவொரு திருத்தம் அல்லது விதி நீக்கமானது, இயக்குநர்களின் குழுவினாலோ அல்லது செயற்குழுவின் ஒரு கமிட்டியாலோ மட்டுமே அளிக்கப்படும். சட்டத்தின்படி தேவைப்படும்போது அது வெளிப்படையாக தெரிவிக்கப்படும். நமது நடத்தை விதிகள் அல்லது நிறுவனக் கொள்கைகளில் எந்த சமயத்திலும் தன்னிச்சையாக மாற்றங்கள் செய்யும் உரிமை நமக்கு உண்டு.

பொதுப் பிரச்சினைகள் பற்றி பொது இடத்தில் பேசுவதற்கும் தங்கள் வேலை சம்பந்தமான விதிகள் மற்றும் நிபந்தனைகள் சம்பந்தாக சில நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குமான தொழிலாளர்களின் உரிமைகளை ஹெர்ஷே ஆதரிக்கிறது. தேசிய தொழிலாளர் உறவுகள் சட்டத்தின் (National Labor Relations Act) பிரிவு 7-ன்கீழ் பாதுகாக்கப்பட்டுள்ள ஊதியங்கள், வேலை நேரம், வேலை செய்யும் சூழல்கள், சுகாதார அபாயங்கள் மற்றும் பாதுகாப்புப் பிரச்சினைகள் சார்ந்த உரையாடல்கள் போன்ற ஒருங்கிணைந்த நடத்தைகளில் ஈடுபடுவதற்கான உரிமையைக் கட்டுப்படுத்தும் நோக்கிலோ அல்லது தலையிடும் நோக்கிலோ நமது எந்தவொரு நடத்தை விதிகள் அல்லது கொள்கைகளில் குறிப்பிடப்படவில்லை.